அக்டோபர் 1983

# துணிந்த பின் சுகமே

புஷ்பா தங்கதுரை

குங்குமச் சிமிழ்



COMICS PDF TIMES
HSC

விலை ரூ. 1-50

என்றும்

# கோபால் பல்பொடி

பாக்கெட்
விலை
45 காசுகள்




பாக்கெட்
விலை
45 காசுகள்

வாங்கி உபயோகியுங்கள் :

தயாரிப்பவர்கள்: S. P. S. ஜெயம் & கோ., மதுரை-1.

# துணிந்த பின் சுகமே


புஷ்பா தங்கதுரை

குங்குமச் சிமிழ்

சிமிழ் 6

அக்டோபர் 1983

விலை ரூ. 1.50

புஷ்பா தங்கதுரை


COMICS PDF TIMES

NOT FOR SALE
FAN MADE ONLY


இந்த இதழில்...


துணிந்தபின் சுகமே - 3

படக்கதை - 77


அட்டையில்: சுகாசினி

வண்ணப்படம்: ரவி


குங்குமம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்டிற்காக, 93-ஏ, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 034-லிருந்து, கலையகம் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் முரசொலி மாறன் எம். ஏ., எம். பி. ஆசிரியர்: பராசக்தி.



# 1

COMICS PDF TIMES

—வணக்கம், தினமித்திரனா?

—ஆமாங்க!

—ஆசிரியர் இலாகா வேணும்.

—தரேங்க!

ஒரு விநாடி

—தினமித்திரன் எடிட்டோரியல்

ஸார், உங்க போலீஸ் ரிப்போர்ட்டர் இருக்காரா?

—நீங்க யாரு?

—அவருக்குத் தெரிஞ்சவரு

—இருங்க . . . . அவர் ஸீட்லே இல்லையே!

அப்புறம் கூப்பிடுறீங்களா?

—ஆகட்டுங்க

தொடர்பு அறுபட்டது.

தினமித்திரன் ஒரு விஸ்தாரக் கட்டடத்தில் குடியிருந்தது. கீழே மிஷின் விவகாரங்கள் வியாபிக்க, மேலே இரண்டு தளங்களில், ஆசிரியர் குழாமும், இயக்குனர் குழாமும்!

காலை மணி பதினொன்று.

ஆபீஸில் களை கட்டிக் கொண்டிருந்தது. டெலிபிரிண்டர் சதா கடகடக்க, ஒரு சிப்பந்தி அதன் நீள வால்களை வெட்டி, வெட்டி உதவி ஆசிரியர் மேஜை மீது பரத்தி கொண்டிருந்தார்.

வரிசையான நாலு மேஜைகளில் நாலு சுட்டிப் பெண்கள் ரிப்போர்ட்களை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார்கள்.

சற்று தள்ளி இரண்டு பெண்கள் புரூஃப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இருபக்கமும் உயரமான சன்னல்களில் கண்ணாடி வேய்ந்திருக்க, ஒரு இண்டிகோ ஆகாயம் கண்ணுக்கு இனிமையாக ஊடுருவிக் கொண்டிருந்தது.

கீழே காண்டினில், குருநாத் காப்பி அருந்திக் கொண்டிருந்தான். ஒரு களைப்பான வெளி வேலைக்குப் பிறகு, ஃபானுக்கு அடியில் ஆசுவாசமாகி, கொஞ்சம் கண்ணை மூடி, ஒவ்வொரு சூப்பாகப் பருகிக் கொண்டிருந்தான்.

பாதி முடிந்தபோது—குரு! என்று தண்டபாணி கூப்பிட்டு வந்தான்.

தண்டபாணி அவனது சக ரிப்போர்ட்டர்.

—உனக்கு யாரோ போன் பண்ணினுங்கப்பா!

—எப்போ?

—இப்பத்தான்! அஞ்சு நிமிஷமாச்சு!

—யாரு?

—தெரியலே! மணிதான் எடுத்தாரு!

இருவரும் சிறிது வம்பளந்தார்கள். வேஜ் போர்ட் நிறைவேறுமா நிறைவேறாதா அவர்கள் பிரச்னை.

—காப்பியில் உடம்பும், பேச்சில் மனமும் விஸ்தாரமாகிய பின், குரு விடை பெற்று மாடிக்குப் போனான்.

யார் போன் பண்ணியிருப்பார்கள்?

ஒரு பிரச்னை!

அவனுக்கு ஒரு ஃபோபியா! போனை எடுக்க மனம் வராது. காரணமே இல்லே! எடுத்தால் ஏதாவது துக்கச் செய்தி வரும் என்று ஒரு எண்ணம். அது எப்படி வேரூன்றியது? தெரியாது.

'உனக்கு போன்' என்று யாராவது சொன்னால் சின்ன நடுக்கம் ஏற்படும்.

போனை எடுத்து காதில் வைக்குமுன் பதட்டம் அதிகமாகும்.

'ஹல்லோ' என்று சொல்லக்கூட வாய் எழாது.

கடைசியில் தெரிந்த குரல் கேட்ட பிறகுதான் அவனது இதயத்துடிப்பு இறங்க ஆரம்பிக்கும்.

மனோதத்துவத்தில் இது ஒரு பிரத்தியேக வியாதியாக இருக்கும். யாரிடமாவது கேட்க வேண்டும் என்று ஆசை.

ஆனால் அவர்கள் அவன் மனத்தைக் கிளறி ஏதாவது பயங்கரங்களை வெளியே கொணர்ந்தால்.... அவன் மனத்துள் அளவில்லாத ஆழத்தில் புதைந்திருந்து அவனுக்கே புதிராக இருக்கும் பயங்கரத்தை எடுத்து காண்பித்தால்....

சீதாவாக இருக்குமா? ஆபீசுக்கு அவள் போன் பண்ண மாட்டாள். பாண்டியனாக இருக்குமா? இல்லை பிரகாசமா?

மேலே போய் உட்கார்ந்தான்.

அந்த நால்வரையும் ஒரு பார்வை பார்த்தான். அழகாக ஒரே உயரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள். அவர்களின் பின்புறங்கள்தான் அவன் பார்வைக்குத் தெரியும்.

எத்தனை வித்தியாசங்கள்! ஒரு உருண்டைத் திரட்சியில் எத்தனை ரகங்கள்!

நைலான்துணி அந்த இன்பப் பகுதிகளை எப்படி எடுப்பாக அநேகமாக நிர்வாணம் போல் சின்னச் சின்ன செதுக்கல், சின்னச் சின்ன நெளிவோடு காட்டுகிறது!

—குரு போன் வந்தது!

மயில்சாமி சொன்னார்!

திரும்பவும் அந்த அதிர்ச்சி!

அது நியாயமில்லை என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அது ஏற்படத்தான் செய்கிறது!

குரு எழுத ஆரம்பித்தான், அவன் போய் வந்த ரிப்போர்ட்! ஒரு பெண்ணின் தற்கொலை பற்றியது. அது கொலையா தற்கொலையா என்பதை விசாரிக்க போயிருந்தான்.

பழுப்பு நிற பேப்பரை வெட்டி, எடுத்து மேஜை மீது பரப்பி, பால் பாயிண்ட்டை வெளியே உருவினான்.

கிணி, கிணி, கிணி என்று மணி. டெலிபோன் சிணுக்கமாகப் பேசியது.

மயில்சாமி எழுந்தார். குருவுக்குக் குறுகுறுத்தது. திறந்த பால் பாயிண்ட்டை ராக்கெட் போல் நட்டு வைத்தான்.

மயில்சாமி ரிஸீவரோடு அவனை நோக்கித் திரும்ப, முதல் அதிர்ச்சி.

—குரு, வாங்க!

—எனக்கா?

—போலீஸ் ரிப்போர்ட்டர் நீதானே?

—என் பெயர் சொல்லலியா?

—இல்லே

—பின்னே வச்சுடுங்க!

வைக்கப்போன மயில்சாமி—என்னன்னு கேட்டுரு, குரு. ரிஸீவரை கீழே வைத்தான்.

குரு எழுந்தான்.

நிதானமாக அடிகளை வைத்துப் போனான். ரிஸீவரை மெல்ல எடுத்தான். கையில் எடுத்து காதுக்குக் கொண்டு போக அனுவசிய வினாடிகளைச் செலவழித்தான்.

—போலீஸ் ரிப்போர்ட்டரா?

—ஆமாங்க! நீங்க யாரு?

—கடைசியில தெரிஞ்சுப்பீங்க! இப்போ மூணு பேப்பர் எடுத்துக்குங்க!

—பேப்பர் எதுக்கு?

—எடுத்துக்குங்க ஸார். திடுக்கிடும் விஷயம் சொல்லப் போறேன்.

குரு, வெறுப்பாக நோட்புக்கை எடுத்து முன்னால் வைத்தான். — சொல்லுங்க

மூணு பேப்பர் எடுத்தீங்களா?

—எடுத்திருக்கிறேன்.

—மொத்தப் பேப்பர்லே நான் சொல்றதை குறிங்க!

அந்த குரலில் சிறிது அதிகாரம் தெரிந்ததும்— இந்தாங்க? என்றான் — என்கிட்டே அதிகாரமாப் பேசினா, வைச்சுட்டுப் போயிடுவேன்.

— ஸார், ஸார், ஸார்! அதமாதிரி செய்யாதீங்க! இது ரொம்ப முக்கிய விஷயம். கேட்டீங்கன்னா ஆச்சரியப்படுவீங்க!

—அப்போ விஷயத்தை மள மளன்னு சொல்லுங்க! வேறே

வேலே இருக்கில்லே!

—சொல்றேன் முதல் காகிதத்திலே குறியுங்க. பூனமல்லிக்குப் போங்க! மேற்கே போங்க! 29வது கி. மீட்டரைத் தாண்டி ஒரு சின்னப்பாலம் வருது; அதை அடுத்தாப்போல இடது பக்கம் ஒரு கச்சாரோடு, குறிச்சுக்கிட்டீங்களா!

—இது என்ன கதை சொல்றியா?

—மிஸ்டர்!

அந்தப் பக்கக் குரலில் ஒரு விசேஷ அதிகாரம் இருந்தது. அதை எதிர்க்க விரும்பினாலும் அவனை அறியாமல் அதற்கு இணங்கிக் கொண்டிருந்தான்.

ஒருவேளை, அவனது பீதித்தன்மைக்கு அது எடுத்துக்காட்டாக இருக்குமா?

அழுத்தமாக வந்த மிஸ்டர் அவன் மார்பை அழுக்கியது.
—மிஸ்டர் .. நான் சொல்றது எல்லாருக்கும் முக்கியம். கேட்டுக்க!

குடித்திருப்பானோ?

— ம் .. சொல்லு!

கச்சா ரோடுலே போய் மேடு ஏறு. இறங்கினா, நிறைய புதரும் செடியுமா இருக்கும். கடந்து போகணும். ஒரு திடீர் இறக்கம் வரும்! அதிலே ஓரமா பார்த்தீங்கன்னா.. பாருங்க! நீங்களே தெரிஞ்சுக்கிடுவீங்க!

—சரி!

—இப்போ ரெண்டாவதைக் குறியுங்க! தாம்பரம் தாண்டணும். இருபது கிலோ மீட்டர் போகணும். வலது ஓரத்திலே பார்த்தா, கஜபதிநகர். பிளாட்கள் விற்கப்படும்னு போர்டு தொங்கும். அது ஓரமா ஒரு பாதை பிரியுது. காட்டுக்குள்ளே போகுது. போங்க! இடைவெளி ஒண்ணு வரும். பாறையா இருக்கும். ஒரு பெரிய பாறைக்குக் கீழே குழி போல இருக்கு! அதிலே இருக்கு பாருங்க! .. இன்னொரு 'பாடி..'

குரு அவசரமாகக் குறிப்புகள் எடுத்தான். முதலில் அசுவாரஸ்யம்! ஆனால் போக போக ஈடுபாடு! மனத்தில் குறுகுறு என்று கதம்ப உணர்ச்சி!

ஒரு சமயத்தில் தமாஷாக தோன்றினாலும், ஒரு ஓரமாக எச்சரிக்கை சிகப்பு விளக்கு சிமிட்டியது.

—'பாடி'ங்கறீங்களே! மனுஷங்க உடம்பா!

—வேறே என்ன?

—கொலை நடந்திருக்கா?

—அதெல்லாம் போய் பாருங்க தெரியும்.. ஹச்சு..

தும்மல் பயங்கரமாக இருந்தது. அதையடுத்து மூக்கை சரிபடுத்தும் சத்தம். பிறகு நிசப்தம்.

—அப்புறம் சொல்லுங்க! மூணுவது விஷயம் என்ன?

பதில் இல்லை. ஆனால் போனில் உயிர் இருந்தது.

—ஹல்லோ .. ஹலோ, .. ஹலோ

குருவிடம் ஒரு திகில்கூட வந்தது.

—ஹலோ

நீட்டித்து ஒரு கடைசிக்குரல் கொடுக்க, மறுமுனையில் ரிஸீவர் மெல்லமாக வைக்கப்படும் சப்தம் கேட்டது.

# 2

எல்லோரும் குருவைச் சுற்றிக் கொண்டார்கள். ஒரு ஹாஸ்யப் பரவசம் அந்த ஆசிரியர் இலாகாவை வியாபித்தது.

அத்தனை பெண்களும் திரும்பி அவனை நோக்கியிருந்தார்கள்'

—தமாஷ்! என்றான் மயில்சாமி

—புருடா விடுறான்! என்றார் தண்டாயுதபாணி.

—ஏப்ரல் ஃபூல்!

—கொலை செய்யப் போறேன். காமிராவோட வா பத்திரிகையிலே படம் போடு என்கிறானே

பற்பல விமர்சனங்கள் அங்கங்கே தோன்றி காற்றில் பறந்தன.

எல்லோரும் அடங்குவதற்கு சிறிது நேரமாகியது.

ஆசிரியர் மனோகரலிங்கம் வெளியே வந்தார். மயில்சாமி அவருக்கு சுருக்கெழுத்தில் விவரம் சொன்னார். மனோகர் குருவின் மேஜை மீது பாதி பிருஷ்டத்தை ஏற்றி வைத்து குறிப்பைப் படித்தார். யோசித்தார்.

குரு! உங்களுக்கு டி.ஐ.ஜி. பழக்கம் ஆச்சே! பிரஸ் கான் ஃபரசுன்சுக்கும் அவர்தானே அடிக்கடி வரார்?

—ஆமா ஸார்.

—நல்லதோ பொல்லாததோ போன் பண்ணி சொல்லி டுங்க! நம்ப கடமையைச் செஞ்ச மாதிரியிருக்கும்.

— எஸ் ஸார்

—பண்ணிடுங்க!

குரு போனை எடுத்தான். டி.ஐ.ஜி.க்குப் போடச் சொன் ஞன்.

முதலில் பி.ஏ. பேசுருர்.

குரு தன்னை அறிமுகமாக்கியதும்— கொஞ்சம் இருங்க! என்ருர்.

டி.ஜ.ஜி. கிடைத்தார்.

குரு விவரமாக விஷயங்களைக் கூறிஞன்.

முடித்தவுடன், டி.ஐ.ஜி. — குரு, இது பெரிய பித்தலாட் டம் விடுங்க. அவன் சொல்ற இடத்தில் 'பாடி' இருந்திச்சுன்ஞ இதுக்குள்ளாற செய்தி எப்படியாவது வந்திருக்கும் விடுங்க என் ருர்.

விட்டாச்சு!

இரவு குருவுக்கு ஏன் அந்த கணகணப்பு வந்தது?

அவனுக்கு பலவீன இதயமா?

டெலிபோன் அடிக்கிருப் போல பலமுறை கேட்டு தூக்கி வாரிப்போட்டது. கண்ணைத் திறந்தால் வியர்த்தது. இருட்டு ரொம்ப திடமாக அறைக்குள் அடைந்திருந்தது.

அது அந்த ஃபோபியாதான்! மனம் எங்கேயோ செல்ல ரித்து பழுதாகி இருக்கிறது. அவனை அறியாமல் அது எப்போதோ நேர்ந்திருக்கிறது. போன் வந்தால் ஏன் பயப்பட வேண்டும்?

அவன் பயப்படுவதற்குத் தகுந்தபடி அந்தச் செய்தியும் வந்து அவனைக் கலக்கி விட்டதே!

மறுநாள்! திரும்பி பிரஸ் மீட்டிங்குக்கு போய்விட்டு அலு வலகம் திரும்பிஞன்.

மயில்சாமி பேசிஞர்—குரு, போன் வந்தது.

—யாரு?

—சொல்ல மாட்டேங்கன்ஞங்க.

— என்ன விஷயம்?

—அதை சொல்லமாட்டேன்றுங்க.

—நேற்று ஆசாமியா?

—இருக்கலாம்.

இடத்தில் உட்கார்ந்தான். வெப்பமாக மூச்சு வந்தது: நாற்காலி முதுகில் சாய்ந்தான். இதயம் பந்தயக் குதிரை ஓட்டத்தில் ஓடியது.

அவனுக்கு ஏன் அந்த சோதனை வரவேண்டும்? அதே போன் வேறு யாருக்காவது போகக் கூடாதா?

அவனை மட்டும் குறிப்பாக, எப்படித் தேர்ந்து எடுத்தான்? அதுவும் போலீஸ் ரிப்போர்ட்டர் என்று குறிப்பிட்டிருக்கிறான்.

பத்திரிகை ஆபீசுக்கு வெளியே இருப்பவர்களுக்கு, பத்திரிகையின் ஆசிரிய இலாகா நடக்கும் விதம் தெரியாது. போலீஸ் கமிஷனர் ஆபீசில் நடக்கும் பிரஸ் மீட்டிங்குக்குத் தினமும் ஒரு ஆள் போய் வருகிறார் என்பது முக்கால்வாசிப் பேருக்குத் தெரியாது.

இந்த ஆசாமிக்கு மட்டும் எப்படித் தெரிந்தது.

பத்திரிகை சம்பந்தப்பட்டவனாக இருப்பானா? அல்லது பத்திரிகை உள் அமைப்புகளைத் தெரிந்தவனாக இருப்பானா?

மணி அடித்தது!

தண்டபாணி எடுத்தார்.

அடுத்த விநாடி அவன் பக்கம் திரும்பினார்.

—இந்தா குரு கால் வந்திருக்கு.

குரு எழுந்திருந்தான், கால் உதறியது. போனை நெருங்கினான். கையில் எடுக்கும் போது மேஜை மீது தடார் என்று விழுந்தது. அதன் சத்தம் ராட்சசத்தனமாக உள்ளே கேட்டது.

—ஹலோ!

—பதில் உதயமாக நேரமாகியது.

—யாரு

—குருதான் பேசறேன்!

— ஏன்யா? உனக்கு மூளையிருக்கா, இல்லையா?

அந்தக் குரலில் உள்ள எகத்தனம் அவனுக்கு நினைவூட்டியது. அதே ஆசாமிதான்.

—ஏய்! சொன்னேனே நேத்து நீ இன்னும் போலீஸ் கிட்டே சொல்லலே!



—சொன்னேனே ஸார்

—எங்கே சொன்னே? யாரும் போய்ப் பார்க்கலயே!

—பார்ப்பாங்க!

—சீக்கிரம் பார்க்கச் சொல்லு! இன்னொரு கொலை விழப் போகுது.

—கொலை செஞ்சது யாரு? நீங்களா!

—அந்தக் கேள்வி உனக்கு வேணும்.

—சரி வேண்டாம்!

நான் சொல்லி விட்டேன்.

—இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கலியே!

—அதைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படறீங்க!

—இன்னொரு கொலை விழுந்திடப்போகுது சீக்கிரம்! நம்பிக்கை வை!......

போன் அறுபட்டது. மீண்டும் எல்லோரும் சூழ கேலி விசாரிப்புகள், தோரணங்களாக வெடித்தன.

எல்லோரும் சேர்ந்து அவனைக் கலவரப்படுத்தினர்கள்.

—யோவ்! குரு! பேரை வேறே சொல்லிட்டே! வெளியில போனு கண்டுக்கிடுவான்.

தினம் இரண்டு கால் இப்படி வந்தா நல்லா இருக்கும்.

எல்லோரும் ஓய்ந்த பிறகு குரு போனை எடுத்தான்.

—டி.ஐ.ஜி. கொடுங்க! என்று சொன்ன போது எல்லோரும் திரும்பினர்கள்.

—நான்தான் குரு பேசறேன், ஸார் திரும்பி அதே ஆள் போன் பண்ணினுன்; ஸார்! குரல்லே நிஜம் தெரிஞ்சுது ஸார்! ரொம்ப நம்பும்படி பேசினுன் ஸார்! ..

அடுத்து குரு நிசப்தமானுன். டி.ஐ.ஜி. ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் பொறுத்து, போனைக் கீழே வைக்க, எல்லாக் கண்களும் அவன் மீது அம்பு தொடுத்தன.

—ஸார்! ஸப் இன்ஸ்பெக்டரை இங்கே அனுப்பறுங்க ஸார்! என்றுன் குரு உதவி ஆசிரியரை நோக்கி.

அவர் புருவம் மட்டும் கண்ணுடிக்கு மேல் உயர்ந்தது.

—என்னை அழைச்சுட்டுப் போறுங்க ஸார்!

—ஜாலி ட்ரிப்! என்றார் மயில்சாமி.

அடுத்த முப்பதாவது நிமிடம் ஜீப் வந்தது.

எஸ்.ஐ. சிவபாதம் மேலே ஏறி வந்தார்— குருநாத் யாரு..

ஐந்து நிமிடத்தில் ஆசிரியர் இலாகா ஒரு முறுவலான வேடிக்கையில் பார்க்க, குரு ஆசிரியர் அனுமதியோடு கீழே இறங்கினான்.

—இந்தா! காமிராக்காரர் சுந்தரம் இருக்காரா? அவரையும் அழைச்சிட்டுப் போ! என்றார் ஆசிரியர் மனோகரலிங்கம், தமது கூண்டைவிட்டு வெளியில் வந்து கொண்டே!

ஜீப்பில் ஏறினார்கள். எஸ்.ஐ. சிவபாதம், முதலில் வயர் லெஸ்ஸில் பேசிவிட்டு, குருவைப் பார்த்து கடுமையாக,

—இதெல்லாம் என்ன ஜோக் ஸார்? என்றார்.

குரு கொஞ்சம் குறுகினான். பதில் சொல்ல முடியவில்லை. அசடாக ஒரு புன்னகை காட்டினான்.

ஜீப் பறந்தது.

—பேஜாரு உத்தியோகம், ஸார்! இங்கே பார்க்க வேண்டிய கேஸ் ஏராளம் இருக்கு! இந்தப் பேத்தல் எல்லாத்தையும் யாராவது தேடிப் போவாங்களா? டி.ஐ.ஜி. எல்லாரையும் தெரிஞ்சு வச்சுக்கிறீங்க! போன் பண்ணிடறீங்க.

பூவிருந்தவல்லி தாண்டியது. ரஸ்தா அனுதையாகப் பறந்தது. மேற்கே வெட்ட வெளிகள். சொற்ப வேளாண்மைகளுடன் தெரிய, ஒரு சலனமற்ற ஆகாயம் குளு குளு நிறமாக கண்ணை எல்லாம் குளிர்வித்தது.

ஜீப் விலாக்களின் வழியே கொத்து கொத்தாக

காற்று அவனை விசாரிக்க, குரு ஒருவித பாதி கலவரத்திலும், பாதி அமைதியிலும் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

—கிலோ மீட்டர் கல்லைப் பாருங்க என்றார் சிவபாதம்.

குரு கவனித்துக் கொண்டு போனான்.

29வது கல் வந்தது. அதைத் தொடர்ந்து பாலம் வந்தது.

—இதுதானே அந்த கச்சா ரோட்?

சிவபாதம் தெரியாத மாதிரி கேட்டார். அவர் கோபம் இன்னும் தணியவில்லை. குருவுக்கு மற்றதையெல்லாம் பொறுக்கலாம் போலவும் அவர் கோபத்தைப் பொறுக்க முடியாது போலவும் இருந்தது.

கடவுளே! அங்கே ஏதாவது இருக்கணுமே என்று பிரார்த்

தித்தான்.

ஆமா ஸார்! மெதுவாய் போகட்டும்.

ஒரு குறிப்பிட்ட தூரம் போனதும் மேலே வழி தூர்ந்து போய்விட்டது.

ஜீப் கதக்களி ஆடி படக்கென்று நின்றது.

கீழே இறங்கினுர்கள்.

ஒரு ஊதக் காற்று விர்ர்ரென்று அடித்தது. இடம் அத்து வானம்!

—எங்கே இருக்கு. சொல்லுங்க!

குரு பாக்கெட்டுல கைவிட்டு குறிப்பை எடுத்தான். பார்த்தான்.

—மேடு ஏறி இறங்கணும் ஸார்.

சிவபாதம் பெரிய தாடைக்காரர். பல்லைக் கடிப்பது நன்ருக பதிவாகியது. அவன் முன்னுல் போக பின்னுல் நடந்தார். இரண்டு ஊமை கான்ஸ்டபிள்கள் சர்வ அமைதியாக பின்னுல் வந்தார்கள்.

எல்லோருமே அவனை வேடிக்கை பார்ப்பது போல இருந்தது.

போட்டோகிராபர் சுந்தரம் அவர்கள் மீது எந்த சிரத்தையும் வைக்கவில்லை, இயற்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மேடு ஏறி இறங்கினுர்கள்.

குரு சற்று நின்ருன். அந்தப் பள்ளம் எங்கிருக்கிறது?

கண்ணுக்குத் தெரியவில்லை.

மேலும் சிறிது தூரம் நடந்து போக அவன் வலது புறம் சற்று தூரத்தில் அது சட்டென்று புலப்பட்டது.

ஆவலோடு நடந்தான் அவன்.

பக் பக் என்று இதயம் அடிக்க, குருவுக்கு ஒரு வேகம் வந்து தாவித் தாவி நடந்து பள்ளம் அருகில் சென்ருன்.

குருவுக்கு அதேசமயம் பாதி அவநம்பிக்கை ஒருவேளை! எதுவும் இல்லாமல் போனுல்..

பள்ளம் பல விளிம்புகளுடன் தென்பட்டது. சில கூர்மையான பாறைகள் துறுத்தியிருந்தன. கீழே தரை முப்பதடியில் இருக்கும். செடிவகை திரளாக வளர்ந்திருக்க, வெறுமையான இடங்களில் சரல்!

கீழே அவன் பார்த்தபோது . .

ஏமாற்றம்! வெறும் தரை தெரிந்தது.

கண்ணைப் பெரிதாக ஓட்டினான். பள்ளத்தின் விஸ்தாரம் பூராவும் தெரிந்தது. ஒவ்வொரு சதுர அங்குலமாகப் பார்வையை நகர்த்தினான்.

ஊஹூம்! சந்தேகப் படும்படியாக எதுவும் இல்லை.

திரும்பினான்.

சிவபாதத்தைப் பார்க்க மனம் இல்லை.

எங்கே? என்று அவர் குரல் பின்னால் மோதியது.

அதுவே அவனை மேலே தள்ளுவது போல இருந்தது.

நடந்தான்.

அது ஒரு ரிஃப்ப்லெக்ஸ் இயக்கம். சும்மா விளிம்பு ஓரமாக நடந்தான். அடுத்த விளிம்புக்கு வந்தான். பார்த்தான். எதுவுமில்லை.

அதற்கு அடுத்த விளிம்பில் பார்க்க அங்கும் இல்லை.

அதற்கு அடுத்து போன போது பள்ளம் சற்று உள் வாங்கி இருந்தது. கீழே பார்த்தால் . .

குரல் மேலே சுருண்டது.

—இன்ஸ்பெக்டர்! இங்கே! என்று கத்தினான்.

கீழே செடிகளின் மத்தியில் கறுப்பாக ஏதோ கிடந்தது.

ஆனால் அதிலிருந்து இரண்டு கால்கள் மட்டும் தனியாக வெளியே வந்திருந்தது.

சிவபாதம் கீழே பார்த்தார். ஏதோ சொல்ல வந்தவர் வாயை அடக்கினார்.

கோபம் மீசையில் வந்தது. ஒரு கேஸ்...அவர் வேண்டாத சமயத்தில் ஒரு கேஸ்!

வெறுப்போடு திரும்பினார். கான்ஸ்டபிள்களைச் சைகை செய்தார்.

கீழே இறங்க வழி பார்த்தார்கள். வடமேற்கு மூலையில் வழி இருந்தது. இறங்கினார்கள்.

கீழே போகப் போக வீச்சம். தரையில் இறங்கி இடத்தை நெருங்கும்போது மூக்கில் கர்ச்சிப்பை மறைத்தார்கள். சுந்தரம் போட்டோக்களை அடித்தார். செடிகள் நடுவில் சடலம் தெரிந்தது.

பதின்மூன்று வயதுப் பெண். ஸ்கூல் யூனிபாரம் போட்டி

ருந்தாள். கண்கள் மூடியிருக்க வாய் பிளந்திருந்தது. ஸ்கர்ட் மேலே பார்த்து தூக்கியிருக்க, இடுப்பு, தொடை அவள் பெண்மை எல்லாம் நிர்வாணமாகத் தெரிந்தது.

—பேஜாரு என்றார் சிவபாதம்.

—சுற்றிலும் கான்ஸ்டபிள்களைப் பார்க்கச் சொன்னார்.

அவர்கள் கோதினார்கள். வேறு எதுவும் கிடைக்கவில்லை.

எல்லோரும் திரும்பினார்கள். மேலே ஏறினார்கள். கான்ஸ்டபிள் ஒருவரை மேலே நிறுத்திவிட்டு, ஜீப்புக்கு வந்து ஏறினார்.

—வாங்க' என்று குருவை அழைத்தார்.

அருகாமை போலீஸ் நிலையம் எங்கே இருக்கிறது என்று யோசித்து அங்கே போனார்கள். போன் தொடர்பில் நகருக்குள் செய்தி பறந்தது. போலீஸ் வேன், போட்டோகிராபர் முதலிய போலீஸ் குழுக்களும் கூப்பிடப்பட்டன.

அடுத்து தாம்பரம் போனார்கள். அங்கிருந்து தெற்கே வெகுதூரம் போய் ''கஜபதி நகர்'' என்று பெயர்ப்பலகை மட்டும் நடப்பட்டிருந்த வெட்ட வெளியை அடைந்தார்கள்.

கச்சா ரோட்டில் போய் காடு போன்று வளர்ந்திருந்த மர அடர்வுகளுக்குள் போய் இடைவெளியைக் கண்டு பிடித்து கடைசியில் பாறையைப் பிடித்து விட்டார்கள்.

அதில் குழிவுகளைத் தேடி கடைசியில் பதினைந்து வயதுப் பெண் சடலத்தைக் கண்டு பிடித்தார்கள். பெண் முகம் கறுத் திருந்தது. வாயில் மண் அடைத்திருந்தது. அவளது பாவாடை கிழிந்து, ஒரு குப்பலாக அவளது பெண்மையை மூடி இருந்தது.

அடுத்த 24 மணி நேரத்தில் போலீஸ் இலாகா துரிதமாக இயங்கியது.

நகரில் காணமல் போன பெண்களின் ஜாபிதா தயார் செய்யப்பட்டது.

இரண்டு பெண்கள் யார் என்று கண்டு பிடிக்கப்பட்டது.

ஒரு பெண் பெயர் மாலதி! எச். எம்.எஸ். ஹைஸ்கூலில் படித்தாள். தந்தை ரத்தினசாமி அரசாங்க ஸர்வே ஆபீஸில் வேலை பார்த்தார். புஷ்பவதி நகர் என்ற புறநகர்ப் பகுதியில் குடியிருந் தார்.

மாலதி ஒரு வெள்ளிக்கிழமை காலை பள்ளிக்குப் போன வள் மாலையில் திரும்பும்போது காணமல் போய் விட்டாள்.

தந்தை ரத்தினசாமி போலீஸில் புகார் கொடுத்திருந் தார்.

பூந்தமல்லி அருகில் கண்டு எடுக்கப்பட்ட சடலம் மாலதி

யுடையது.

மற்ருெரு பெண் லதா மணி! தந்தை பெயர் வெங்கடா சலம். ரயில்வேயில் ஃபோர்மேஞக வேலை பார்த்தார். லதா மணி சாவித்திரி வித்யாலயாவில் படித்து வந்தாள். வியாழன் மாலையில் சிநேகிதி வீட்டுக்குப் போனவள் திரும்பவில்லை. 'கஜபதிநகர்' காட்டில் பிணமாகக் கிடந்தாள்.

லதா மணியின் குடும்பம் சுதந்திரா காலனியில் இருந்தது.

இரண்டு கேஸ்களும் பதிவானவுடன், முதலில் இதை விசாரிப்பது எந்த போலீஸ் நிலையம் என்று சில சிக்கல்கள் ஏற்பட்டன.

கடைசியில் சிவபாதத்திற்கு அதிர்ஷ்டமாக கேஸ் ஸி.ஐ.டி.யினருக்கு மாற்றப்பட்டு,

கடைசியில் இன்ஸ்பெக்டர் சிங் தலையில் வந்து விழுந்தது.

சிங்குக்கு பூர்வாங்க விவரங்கள் தெரிந்தவுடன் உடனே செயலில் இறங்கிவிட முற்பட்டார்.

இது போன்ற கொலைகளில் அவசரம் அதிகம் தேவை.

ஏனெனில் குற்றவாளி இன்னொரு கொலைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருப்பான்.

அதற்கு அடிப்படைக் காரணம் ஏதாவது இருக்கும்.

அந்தக் காரணம் தீரும் வரை அவன் இயங்கிக் கொண்டே இருப்பான்.

ஒரு விஷயம் அவருக்கு ஏதோ உதவுவதாகக் காட்டியது.

குற்றவாளி தான் செய்ததை மற்றவர்க்கு கூறும் அளவுக்கு ஏதோ ஒரு அனுகூலப் புத்தி இருந்திருக்கிறது.

இது ஒரு விதத்தில் அவனது மனத்தில் அரிப்பைக் காட்டுகிறது.

அதை வைத்துக்கொண்டே அவனைப் பிடிப்பதற்கு வழிகள் பார்த்தால் என்ன?

தினமித்திரன் காரியாலயம் போனர்.

ஒரு ஊகம் ஏற்பட்டிருந்தது.

குற்றவாளி மீண்டும் குருவைத் தொடர்பு கொள்ள நினைக்கலாம்.

குறிப்பாக அந்த மூன்ருவது காகிதத்தை — இன்னும் அவன் பூர்த்தி செய்யவில்லையே!

இரண்டு காகிதத்திற்கு உரிய கொலைகள் நிகழ்ந்து விட்டன.

மூன்றுவதற்கு இன்னும் நிகழவில்லை.

ஒருவேளை ஏற்கெனவே நிகழ்ந்து இன்னும் வெளி வராமல் இருக்கிறதோ என்னவோ?

குற்றவாளி அதை மீண்டும் குருவுக்கே வெளிப்படுத்த முயலலாம்.

எனவே . . . .

தினமித்திரன் ஒரு லட்சம் பிரதி பத்திரிகை! இந்தக் கொலைக் கண்டுபிடிப்பில் அது கொஞ்சம் வெயில் காய்ந்தது.

கண்டுபிடிப்பு விவரங்களை விஸ்தாரமாகப் பிரசுரம் செய்து, நிறையப் படங்களை அள்ளிப் போட்டது.

சிங் டெலிபோன் நிறுவனத்தாருடன் தொடர்பு கொண்டு அவர்களை தினமித்திரன் காரியாலயத்திற்கு அழைத்து வந்திருந்தார்.

குருவின் மேஜையில் ஒரு புது டெலிபோன் வைக்கப்பட்டது.

அந்த போனில் விசேஷ இணைப்புகள் சேர்க்கப்பட்டன.

இணைப்பின் தொடர்புகள் ஒரு டேப் ரிகார்டரில் கொண்டு போய்ச் சொருகப்பட்டது.

ரிஸீவரை எடுத்தால் ரிக்கார்டர் உடனே வேலை செய்யும்படி பொருத்தப்பட்டது.

குருவுக்கு கால் வந்தால் உடனே அந்தச் செய்தி போன் நிலையத்தாருக்கு அறிவிக்கப்பட ஏற்பாடு நடந்தது.

உடனே அவர்கள் குருவின் கால் எந்த இடத்திலிருந்து உற்பத்தியாகி வருகிறது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

நகரில் போலீஸ் வான்கள் எல்லாம் 24 மணி நேர தயாரில் இருக்கும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

தினமித்திரனில் டெலிபோன் புதிதாக இணைப்புகள் முடிந்த பின்

சிங் குருவின் நாற்காலி முன்னுல் உட்கார்ந்தார்.

—குரு-எனக்கு கொஞ்சம் விவரங்களைச் சொல்ல முடியுமா? உங்களுக்கு போன் வந்ததுன்னு சொன்னிங்க! எப்போ வந்தது! என்றுர் சிங்.

—காலையிலே பதினொன்னு நாற்பது இருக்கும் ஸார்.

—அப்போ யாரு இங்கே இருந்தாங்க?

—எல்லோரும் இருந்தாங்க ஸார்.

—ஆசிரியர் குழுதானே!

—ஆமா ஸார்!

—இரண்டாவது கால் எப்போ வந்திச்சு?

—அடுத்த நாள் அதே நேரம்!

—சரி இப்போ நீங்க என்ன செய்யணும்னு சொல்றேன்.

—சொல்லுங்க ஸார்!

—உங்க போன் அடிச்சதுன்னு நீங்க பொறுமையா வரணும். ரிஸீவரை மெதுவா எடுக்கணும். ஹலோ! ஹலோ! யார் பேசறீங்க! காது கேட்கலேன்னு சில விநாடியைக் கடத்தணும். அப்புறம் பேசுங்க. எவ்வளவு நாழிகை பேசிட்டே இருக்கிறீங்களோ அவ்வளவு நல்லது. அப்போத்தான் டெலிபோன்காரங்க அந்த கால் எங்கேருந்து வருதுன்னு கண்டுபிடிப்பாங்க. ஓகே!

குரு தலையை மட்டும் ஆட்டினான். கண்ணில் அந்த அதைரியம் வந்திருந்தது.

இப்படி அனாவசியமாக ஒரு குழப்பத்துக்கு ஆளாகிறோம் என்று நினைத்தான்.

அவனைப் புரிந்தது போல் சிங் பேசினார். — குரு என்றார்!

—எஸ் ஸார்!

—நீங்க ஏதோ சங்கடப்படற மாதிரி இருக்கே!

—இல்லே ஸார்.

—ஏதாவது இருந்தா சொல்லலாம்.

—எதுவுமில்லே.

அடுத்து சிங் தமது கான்ஸ்டபிளுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை விளக்கினார். கான்ஸ்டபிளை போன் பக்கத்திலேயே இருக்கச் சொன்னார்.

பிறகு குருவிடம் திரும்பினார்.

—குரு. நீங்க பயப்படறது தெரியறது! என்றார்.

—இல்லே ஸார்! ஏதாவது விளையாட்டாக ஆரம்பிக்கப் போய் . .

—கவலைப்படாதீங்க! உங்க வீட்டுக்குக் காவல் போடறோம்.

—எங்க வீட்டுக்கா? வேண்டாம் ஸார்.

—இல்லே. அவசியம் தேவை. அதைப் போடறோம்.

பிறகு சிங் விசாரித்தார்.

அதே நேரம் அவரது அஸிஸ்டெண்ட் லிங்க் (ராஜலிங்கம்]

பூந்தமல்லி தாண்டி கச்சா ரோட்டில் போய் அந்த பாளத்தை அடைந்திருந்தான்.

அவனுடன் இருபது மஃப்ட்டி காவலர்கள் வந்திருந்தார்கள்.

லிங்க் அவர்களைக் குழுக் குழுவாகப் பிரித்தான்.

அந்தப் பள்ளத்தை மையமாக வைத்துக்கொண்டு வெவ்வேறு கோணங்களில் அவர்களைத் தேடிப் போகும்படி உத்தரவு வழங்கினன்.

தும்பை, நாயுருவி, செங்கட்டான், கள்ளி ஆகிய பல்வேறு செடிகள் அந்தப் பிரதேசத்தை நிறைத்திருந்தன.

வெய்யில் மிதமான கிரணங்களை பரப்பிவிட வானத்தில் சிறுசிறு ஸிர்ரஸ் மேகங்கள் சோம்பலாக வளைந்தன.

வெகு தூரம் வரை இந்த வறட்சி நிலச் செடி வகைகள், புதர் புதராக வியாபித்திருந்தன.

குழுவாகப் பிரிந்த போலீசார் உன்னிப்பாகப் பார்வையைக் கீழே சரியவிட்டு நடந்தார்கள்.

எது கிடைத்தாலும் உடனே தகவல் தரும்படி உத்தரவு.

குறிப்பாக லிங்கை சிங் ஒரு விஷயம் கேட்டுக் கொண்டிருந்தார்.

கொலை செய்வதற்கு கருவி ஏதாவது பயன்பட்டிருக்கும். அதைக் கொலையாளி அங்கே எங்கேனும் தூக்கி எறிந்திருப்பான். அல்லது கொலையாளியின் வேறு ஏதாவது தடயம் அங்கே கிடைப்பதற்கு சாத்தியக்கூறு உண்டு.

இவைகளில் ஏதாவது கிடைத்தால் அது துப்புத் துலக்குவதற்கு பெரிதும் பயன்படும்.

குழுவினர் அதி கவனமாக, செடி கொடிகளிடையே தேடினார்கள்.

எங்கேயாவது சருகு, அல்லது தழை குவியலாக இருந்தால் அவைகளைக் கிளறிவிட்டு உள்ளே பார்த்தார்கள்.

பாறுங் கற்கள் தென்பட்டால் அவற்றை இடத்தை விட்டு உருட்டிப் பார்த்தார்கள்.

தாகம், வியர்வை, களைப்பு எதையும் பொருட்படுத்தவில்லை.

லிங்க் கொடுத்த உற்சாகத்தில் மிகுந்த பொறுப்போடு அவர்கள் தேடினார்கள்.

இரண்டு மணி நேரமும் ஒரு மைல் சதுர அளவும் தேடிய பிறகு எதுவும் கிடைக்கவில்லை என்பது தெரிய வந்தது.

சற்று ஏமாற்றத்தோடு லாரியில் ஏறி நகரை நோக்கித்



திரும்பத் தொடங்கினார்கள்.

சாப்பிட்டுவிட்டு பிறகு இவர்கள் திரும்ப, தாம்பரம் பகுதி போய்த் தேட வேண்டும்.

சிங் தமது மணி நேரங்களை பிரபல பிரஞ்சு துப்பறியும் அமைப்பான 'ல ஸ் யுர்தே' பற்றி ஒரு தடிப் புத்தகத்தைப் படித்து கொண்டிருந்தார்.

இன்றும் அவர் தினமித்திரன் ஆபீசில் ஆசிரியர் குழு பகுதியில் சன்னலோரம் அவருக்காகப் போடப்பட்ட தனி நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

எந்த போன் மணி அடித்தாலும் அவர் குருவை ஒரு கண் பார்த்தார்.

'ல ஸ் யுர்தே' அமைப்பில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் வரும்போது

'தவறுதலாக வழங்கப்பட்ட நியாயங்கள்' என்ற அத்தியாயத்திற்கு வந்து சேர்ந்தார்.

எப்படி அந்த புகழ் பெற்ற நிறுவனமே தவறுதலாக சில நிரபராதிகள் மீது குற்றங்களைச் சுமத்த நேர்ந்தது என்பதைப் பற்றி விளக்கமாக அந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருந்தது.

முதல் கேஸைப் படித்ததும் சற்று நிறுத்தினார். மனசு எங்கேயோ நெருடியது.

அதில் ஒரு பெண்ணுடன் கடைசியாகப் பார்க்கப்பட்ட ஒரு இளைஞன் அந்தப் பெண் கொலையான பிறகு எப்படி அநியாயமாய்க் குற்றம் சாட்டப்பட்டான் என்று விவரிக்கப்பட்டிருந்தது.

டப்பென்று புத்தகத்தை மூடினார். கண்ணை மூடினார். அடி ஆழத்தில் ஏதோ நம நம என்று அரித்தது.

அந்த ஆழ்ந்த 'ஏதோ'வை வெளியில் கொண்டுவர பல வித்தைகள் செய்தார். வரவில்லை. எழுந்து வராந்தா பக்கம் போனார்.

குளிர்ச்சியாக மிதமான வெளிச்சத்துடன் நீளமாக இருந்தது.

அதில் மேலும் முழுதும் உலாவத் தொடங்கினார்.

பத்து நிமிடம் உலாவி இருப்பார். பிறகு உள்ளே வந்தார். வேறொரு போனில் தலைமையகத்தோடு தொடர்பு கொண்டார்.

—சிங் பேசறேன்! கொஞ்சம் ஏ.ஸி. கொடுங்க!

—ஹலோ!

—சிங் பேசறேன். வணக்கம் மிஸ்டர் ரவி! போன வருஷம் கூடுவாஞ்சேரி பக்கம் ஒரு இளம் பெண் செத்துக் கிடந்தா! ஞாபகம் இருக்கா!

—எஸ் ஸார்! இந்த ஸ்டேஷன் வந்த உடனே எனக்கு வந்த முதல் கேஸ்!

—பதினெட்டு வயதுப் பெண்ணு?

—இல்லே ஸார். 20 வயசு! பார்க்கச் சின்னவளா இருந்தாங்க! கழுத்தை இறுக்கி கொலே! பெண்ணை புணர்ச்சி பண்ணி இருந்தாங்க! பெண் பெயர் சம்பகா!

—ஆளைப் பிடிச்சீங்க இல்லே?

—ஆமா ஸார்! முப்பத்தைந்து வயது ஆசாமி. முத்துராம்னு பேரு.

—நேர் சாட்சி இருந்திச்சா?

—இல்லே ஸார் கன்ஃபெஷன்!

முதல்லே ஒத்துக்கிட்டு கோர்ட்லே அதை மறுத்தாரு!

—தண்டனே எவ்வளவு?

—எட்டு வருஷம் ஆர். ஐ!

—சரி, மனுஷன் இப்போ பரோல்லே வந்திருப்பாரா?
—இல்லே ஸார்! இதுக்குள்ளே பரோல் கொடுக்கமாட்டாங்க!
—அப்போ ஆசாமி உள்ளேதான் இருக்கார்.

—ஆமாம் ஸார்!

சிங் உடனே எழுந்தார். குரு பக்கம் வந்தார்— பரவாயில்லே குரு! இன்னிக்கு போன் கால் வராது போல இருக்கு! இருந்தாலும் சாயங்காலம் அஞ்சு மணி வரைக்கும் இருந்திட்டு போங்க!

—எஸ் ஸார்!

சிங் அவசரமாக வாசலுக்கு ஓடினார்.

ஜீப்பில் அவசரமாக ஏறி உட்கார்ந்தார்.

—ஜி. ஜி. மத்திய சிறைக்குப் போங்க! என்றார்.

சிங் சிறை சூப்பிரண்டண்டிடம் தெரிவித்துவிட்டு நேராக 'பி' பிளாக் போனார்.

வார்டர்கள் அவருக்கு ஸல்யூட் அடித்தார்கள்.

பக்கிரி என்ற ஒரு ஆயுள் தண்டனைக்காரர்! பதினைந்து வருடமாக உள்ளே இருந்தார். நல்ல குணம் உள்ளவர்— வார்டராக இருந்தார்.

சிங்கை அவர் அழைத்துக்கொண்டு முத்துராம் இருந்த டார்மெட்டரிக்குப் போனார்.

கதவை திறந்து முத்துராமை வெளியே அழைத்தார்கள்.

முத்துராமை பார்த்ததும், சிங் மனம் துணுக்குற்றது.

முத்துராமின் கண்கள் வெகுளியாக இருந்தன.

சிலர் கண்களைப் பார்த்தாலே குற்றவாளி என்று சொல்ல முடியும். சிலரது கண்களில் ஒரு நிரபராதித்தனம் நிலவியிருக்கும்.

இரண்டாவது வகையில் இருந்தது முத்துராமின் கண்கள்

முகத்தில் கூட ஒரு புத்தத்துவம்!

—வாங்க ஸார்! உட்காருங்க! என்று சிங் அவரை மரியாதை கொடுத்துப் பேச

முத்துராம் அவர்கள் இருவரையும் பார்த்து மிரள விழித்தார்.

சற்று தயக்கம். எழுந்து உட்கார்ந்தார்.

—சம்பகா கேஸ்லே தண்டனை அடைஞ்சவங்க நீங்கதானே!

—ஆமாம் ஸார்.

—கோர்ட்டுலே நீங்க குற்றத்தை ஒப்புக்கிட்டிங்களா?

—ஒப்புக்கிடல்லை.

—ஏன்?

—குற்றத்தை நான் செய்யலே!

—உங்களை ஏன் பிடிச்சாங்க!

—அந்த பெண் வீட்டிற்கு ரெண்டு வீடு தள்ளி இருக்கிறேன்.

—அதனாலேதான் பிடிச்சாங்களா?

—அந்த பெண் எங்க வீட்டுக்கு அடிக்கடி வரும். நாங்க சிரிச்சுப் பேசுவோம்.

—நீங்கன்னு யார் யாரு?

—நானும் என் மனைவி சுசிலாவும்!

—நீங்க தனியே இருக்கும் போது வருமா?

—ம்! வரும்! அன்னிக்கு அப்படித்தான் நடந்திச்சு. சுசிலா அப்பா வீட்டுக்குப் போயிருந்தா.

—ஓகோ. அப்பா வீடு எங்கே?

—திருநீர்மலையிலே.

—அவங்க அங்கே போயிட்டாங்க! நீங்க வீட்டிலே தனியா

இருந்தீங்க! அப்புறம்?

—மனைவி போனப்புறம் பதிஞெரு மணிக்கே கதவைப் பூட்டிட்டு வெளியிலே போயிட்டேன். அப்புறம் ராத்திரிக்குத்தான் வீட்டுக்கு வந்தேன். ஆனு என்னை போலீசார் அனுவசியமாக வந்து பிடிச்சுட்டாங்க!

—குற்றச்சாட்டு எப்படி?

—அந்தப் பெண்ணை வீட்டிலே கற்பழிச்சுக் கொன்னுட்டேன்னு!

—வெளியிலே போனீங்களே! அலிபி உண்டா?

—நானும், என் சிநேகிதன் ராமசாமி, தங்கவேல் மூணு பேரும் சீட்டு விளையாடிட்டிருந்தோம்.

—பகல் பூராவுமா?

—ஆமா ஸார்! சீட்டுனு எனக்கு வெறி ஸார். ஒரு நாள் கூட ஆடாமல் இருக்க முடியாது. கையிலே ஒரு ஊறல் எடுக்கும் பாருங்க! ஆனு இதை வச்சு என்னை மோசமா நினைச்சுடாதீங்க. நான் ஒரு நல்ல ஆசாமி! எல்லார் கிட்டேயும் கேட்டு பாருங்க! எங்க தெருவிலே, ஆபீசிலே எங்கேயும் கேளுங்க! இந்த ஒரு சீட்டுப் பழக்கத்துக்குத்தான் நான் அடிமை!

—நீங்க சிகரெட், பொடி எதுவும் போடமாட்டிங்களா?

—சிகரெட் எப்பவாவது

சிலவங்க நிமிஷத்துக்கு நிமிஷம் குடிப்பாங்க இல்லே! அந்த வெறி மாதிரி என் வெறி! அதுவே என்னை சிக்கல்லே மாட்டி வச்சுடுத்து.

—சரி — போலீஸ் உங்களோடு விளையாடியவர்களை விசாரிக்கலையா?

—விசாரிச்சாங்க! அவர்களே வந்து சொன்னுங்க ஸார்! கேட்கலே.

—ஏன்?

—அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். என்னை போலீஸ் தனி அறையிலே அடைச்சுப் போட்டு அடிஅடின்னு அடிச்சாங்க. ஒரு வாரம் அடிச்சாங்க! நகக் கண்ணுலே ஊசி குத்தினுங்க! ஆசனத்திலே மிளகாயைத் திணிச்சாங்க! பாதத்திலே ஐஸ் கட்டியைக் கட்டினுங்க! என்னுடைய உறுப்பிலே லத்தியாலே தட்டி— ஐயோ இப்போ நினைச்சாலும் மனம் பதறுது!

அவர் பட்ட அவஸ்தைகளின் வலிப் பரிமாணங்கள் மீண்டும் அவர் முகத்தில் வரிகளாக படிந்தன.

உதடு கூட நடுங்கியது.

அப்புறம் ஒத்துக்கிட்டீங்க.

—அப்புறம் என்ன! ஒரு வாரமா அடிச்சாங்க! பிராணன் போயிடுத்து. கடைசியிலே எனக்கு வேற வழி தோணல்லே. ஒத்துக்கிட்டாத்தான் இந்த வேதனையைத் தப்பலாம். இதோ ஒப்புதல் வாக்குமூலம் சொல்றேன்னு கடகடன்னு நடந்ததை கற்பனை பண்ணிச் சொன்னேன்.

—எழுதித் தரச் சொன்னாங்களா?

— எழுத முடியல்லே! கையெல்லாம் நடுக்கம்; அவர்களே எழுதிட்டாங்க.

—சொல்லச் சொல்ல எழுதினாங்களா?

—ஆமாங்க! அப்பப்போ மாத்திச் சொல்லச் சொன்னாங்க

—ஏன்?

—அதாவது அவங்க கண்டு பிடிச்ச விஷயத்துக்கு ஒத்து வரலேன்னா என் வாக்குமூலத்தை மாத்தி சொல்லச் சொன்னாங்க!

—கையெழுத்துப் போட்டீங்களா?

—ஆமாம்! இல்லாட்டி விடுவார்களா!

—அப்புறம் கோர்ட்லே என்ன சொன்னீங்க!

—நான் கொடுத்த வாக்குமூலம் தப்பு; அதை நான் பலவந்தத்தின் பேரிலே கொடுத்தேன். அத்தனையும் பொய். நான் நிரபராதின்னு வாதாடினேன்.

—அப்புறம்?

—நீதிபதி நம்பலே—தீட்டிட்டார்.

சிங் முகத்தை கீழே சரித்தார். முத்துராம் அமைதியாக நின்றார். சிங் நிமிர்ந்தபோது முத்துராம் கண்களில் புலபுல என்று கண்ணீர் உதிர்ந்தது.

சிங் மனம் ஈரமாகியது.

—சத்தியமா இந்த கொலையிலே உங்களுக்கு எதுவும் தெரியாது?

—திருப்பதி சாமி சாட்சியா சத்தியம் ஸார்! எனக்கும் அந்த கொலைக்கும் சம்பந்தமே கிடையாது.

சிங் மெல்ல எழுந்தார். —கவலைப்படாதிங்க! சீக்கிரம் உங்களுக்கு விடுதலை கிடைக்கும்.

—கிடைக்குமா ஸார்!

—ஆண்டவன் மேலே நம்பிக்கை வையுங்க!

—அப்படி வச்சுத்தான் அவரை மலைபோல நம்பியிருக்

கேன்.

—அப்புறம் சந்திக்கிறேன். வரட்டுமா?

சிங் விடை பெற்றார்.

# 3

இரவு சிங்குக்கு உறக்கம் வரவில்லை. ஒரு வருடத்திற்கு முன் நிகழ்ந்த அந்த கொலையும் அதன் விளைவுகளும் அவர் மீது போர்வையாக ஒட்டி இருந்தன.

—இந்த கேஸில் நியாயம் சரியாக வழங்கப்படவில்லை என்று நினைத்தார்.

காலையில் பத்து மணிக்கு இன்ஸ்பெக்டர் ரவி, சம்பகா கேஸ் ஃபைலைக் கொடுத்து அனுப்பியிருந்தார்.

சிங் பத்து நிமிடத்தில் அது முழுவதையும் படித்துத் தீர்த்தார்.

குறிப்பாக போஸ்ட் மார்டம் ரிப்போர்ட்டை ஆராய்ந்தார்.

பத்தரை மணிக்கு ஃபோரன்ஸிக்லாபுக்கு போன் பண்ணினார்

வெங்கட்ராமன்தான் இருந்தார்.

—உங்க கிட்டேருந்து கால் வர்லேயென்னு பார்த்தேன்! என்றார் வெங்கட்ராம்.

—இதோ வந்தாச்சு, வெங்கட்ராம்! ரெண்டு பெண்களையும் முடிச்சாச்சு இல்லே?

—அநேகமாக முடிச்சாச்சு! சாயங்காலத்துக்குள்ளே ரிப்போர்ட் தயாராயிடும்.

—ஒரு ஜோஸ்யம் சொல்லட்டுமா!

—சொல்லுங்க!

—இந்த இரண்டு பெண்களையும் கழுத்திலே நைலான் கயிற்றைப் போட்டு இறுக்கிக் கொன்னுருக்காங்களா?

—ஒவ் என்று ஆச்சரியத்தில் ஒரு சின்ன கூச்சல் போட்டார் வெங்கட்ராம்!

—இன்னும் சொல்றேன்! கயிறு இறுகி கழுத்துக்குள்ளேயே போயிடுத்தா?

—எப்படிச் சொல்றீங்க, சிங்!

வெங்கட்ராமின் அதிசயம் டெலிபோன் வொயர் மூலம் இந்த பக்கம் வந்தது.

—ஜோஸ்யம்னு சொல்லிட்டேனே.

—இன்னும் ஏதாவது தெரியுமா?

—ஸெக்ஸ் உறவு நடந்திருக்கணும்.

—எஸ் உண்மை.

—வலது பக்க மார்பு காம்பிலே கீறல் இருக்கணும். பல் கீறல்.

—எக்ஸாக்ட்லி — எப்படிக் கண்டு பிடிச்சீங்க! பிரேதத்தைப் பார்த்தீங்களா?

—பார்க்கவே இல்லே. கேஸை பார்க்கிறதுக்கு முன்னுடியே சடலம் உங்க 'லாப்'புக்கு போயிடுச்சு!

—பின்னே எப்படிச் சொல்றீங்க?

—உங்க போன வருட ரிப்போர்ட்டை வச்சு சொல்றேன்.

—போன வருட ரிப்போர்ட்டா?

—சம்பகான்னு பொண்ணு. இதே மாதிரி கற்பழிப்பு கொலே. சரியா ஒரு வருஷம் ஆச்சா?

—ஞாபகம் இருக்கு,

—அந்த கொலேயையும் இப்போ இந்த ரெண்டு கொலேகளையும் செஞ்சது ஒரே ஆள்தான்னு ஊகம் பண்ணினேன். அது சரியாப் போச்சு!

—சபாஷ், சிங்! ஒரேமாதிரிதான் கொலே பண்ணியிருந்தான். மூணு கொலேகளையும் செய்தது ஒரே ஆளாத்தான் இருக்கணும்.

—அந்த அடிப்படையிலேதான் இப்போ புதுசா கேஸை விசாரிக்கப் போறேன்.

—பெஸ்ட் விஷ்ஸஸ்!
—தாங்க்யு! இன்னும் ஒரே ஒரு விஷயம்.

COMICS PDF TIMES

—கேளுங்க.

—ரெண்டு பெண்களும் எப்போ செத்துப் போனுங்க! டாக்டர் சொல்லிட்டாரில்லே!

—முதல் பெண் மாலதி வெள்ளிக்கிழமை ராத்திரி எட்டு மணிக்கு இறந்திருக்கா! லதாமணி வியாழக்கிழமை ராத்திரி ஒன்பது மணிக்கு.

—ரைட் ஸார்! தாங்க்ஸ்.

# 4

சிங்குக்கு அந்த விஷயம் தீர்மானமானது பற்றி மிக்க மகிழ்ச்சி.

ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பது அவருடைய நிச்சயமான ஆவல்.

அந்த சம்பகா விஷயத்தில் ஒரு நிரபராதி தண்டனைக்குள்ளானது எவ்வளவு கேவலமான விஷயம்.

அதுவும் போலீஸ் பலாத்காரத்தோடு ஒரு வாக்கு மூலத்தை வாங்கி......

அங்கங்கே தப்பிதங்கள் நடந்து விடுகின்றன.

முத்துராம் அந்தக் கொலை செய்யவில்லை என்பது தெரிந்து விட்டது.

ஆனல் கோர்ட்டுக்கு இது போதாது. ஏதாவது ஆதாரமான தடயம் வேண்டும்.

இதற்கு என்ன செய்வது!

நிஜக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும். அவனிடமிருந்து சாட்சியம் பெற வேண்டும்.

அவனைக் கண்டு பிடிப்பது எப்படி?

இதுவரை தடயம் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டு பெண்கள் காணமல் போன கிழமைகளை வைத்து விசாரணை செய்ய சிங் உத்தரவு இட்டிருந்தார்.

ஆனல் அவருக்குத் தெரியும்— துப்புத் தெரிந்திருந்தால் இதற்குள் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் இனி கிடைப்

பது சற்று துர்லபம்.

அவருக்கு ஆவல் பூராவும் போனிலேயே இருந்தது.

போனில் திரும்பி அவன் கிடைத்தால்..

அடுத்த இரண்டு தினமும் அவர் தினமித்திரன் போய் உட்கார்ந்திருந்தார். போன் வரவில்லை.

மூன்றும் நாள் போயிருந்த போது பன்னிரண்டு மணிக்கு குருவின் போன் அடித்தது.

ஆசிரியர் குழு முழுதும் கவனமாகிவிட்டது. சிங் தலை நிமிர்ந்தார். ஹாலில் ஒரு மின்சார அதிர்ச்சி ஓடியது.

குருவுக்கு ஏன் அவ்வளவு பதட்டம் வந்தது தெரியவில்லை.

எழுந்திருக்கும் போதே நாற்காலியில் தள்ளாடினான்.

பிறகு சமாளித்து போன் அருகில் போய், மெதுவாக ரிஸீவரை எடுத்தான்.

—ஹலோ!

—குருதானே!

அந்தக் கட்டைக் குரல் எடுப்பாகக் கேட்டது. கூடவே சில கரகரக்கள் யந்திரத்தனமாக உற்பத்தியாகி வந்தன.

—ஆமாங்க!

—ஏங்க! போலீஸ் தூங்கறுங்களா?

—ஏன்?

—இன்னும் என்னைப் பிடிக்க வர்லையே!

குரு வெறுமனே சிரித்தான்.

—சீக்கிரம் என்னை உள்ளே வைக்கச் சொல்லுங்க! நான் வெளியிலே இருந்தா கொலை விழுந்துக்கிட்டே இருக்கும்.

—ஐயோ, அப்படியெல்லாம் செய்யாதிங்க! இதுவரை செஞ்சது போதும். என்ன பயங்கரம்!

—என்னை நீங்க மோசமானவன்னு நினைக்கிறிங்க இல்லே?

—இல்லை. அப்படி எல்லாம் நினைக்கலே.

—நான் மோசமானவனே இல்லே! நேற்று நான் என்ன செஞ்சேன் தெரியுமா?

சிங் இதற்குள் ஏதோ ஜாடை காட்ட குரு அவர் பக்கம் திரும்பினான்.

—என்ன பேசாம இருக்கிங்க? பக்கத்திலே யாராவது இருக்

காங்களா? போலீஸ், கிலீஸ் .... கரகரப்புடன் கேட்டான் அவன்.

—ஐயோ! அதெல்லாம் இல்லிங்க! நீங்க பேசுங்க! இங்கே ஒரு காகிதம் பறந்தது! என்றான் குரு.

—நேற்று நான் பூந்தமல்லிப் பக்கம் போய், பள்ளத்திலே இறங்கி அந்தப் பெண் கிடந்த இடத்திலே பிரார்த்தனை பண்ணிட்டு வந்தேன்.

—அப்படியா! உங்களுக்கு இரக்கம் இருக்கே! அப்படியானா நீங்க அந்தப் பெண்களைக் கொன்னிருக்க வேண்டாமே!

அவன் பக்கத்தில் நிசப்தம்.

—ஹலோ .. ஹலோ ..

—இருக்கேன்! மிஸ்டர் குரு! நான் ஒரு மனோ வியாதிக்காரன்! என்னைத் தயவு செய்து வெளியே விட்டு வைக்காதீங்க!

சிங் ஒரு பெரிய பேப்பரில் 'உனக்குத் தேவையானால் நான் உதவி செய்கிறேன். போலீஸ் உன்னை எதுவும் செய்யாது' என்று எழுதிக் காண்பித்தார்.

—ஆ .. ஆ.. அதுசரி! தே வை யா னா ல் நான் உனக்கு உதவி செய்யறேன். போலீஸ் பற்றி கவலைப்பட வேண்டாம்!

சிரித்தான் அந்த ஆசாமி.

—ஹல்லோ .. ஹல்லோ ..

—இதுக்கு மேலே நான் பேசமாட்டேன்! என்னை போலீஸ் கண்டு பிடிச்சுக்கும்.

டக்கென்று போனை வைத்தான் அவன்!

குரு ரிஸீவரைத் தயங்கி வைத்தான். சிங் எழுந்து வந்தார். எல்லாரது மௌனமும் பட்டென்று சலசலப்பு ஆகியது.

சிங் கை காட்டி எல்லாரையும் அமர்த்தினார். இரண்டாவது போனுக்கு அருகில் போய்க் காத்திருந்தார்.

சில வினாடிகள்.

பிறகு அது ரீங்கரித்தது.

எடுத்து — ஹலோ ! சிங் பேசறேன்! என்றார்.

டெலிபோன் எக்ஸ்சேஞ்சிலிருந்து பேசினார்கள்.

—மிஸ்டர் சிங்! 'காலை' கண்டு பிடிக்க முடியல்லே. செண்ட்ரல் எக்ஸ்சேஞ்ச் வரை கண்டு பிடிக்க முடிந்தது! அதுக்குப் பிறகு பின்பற்றறதுக்குள்ளே, 'கால்' 'கட்'டாயிடுத்து.

சிங் தலையைக் குனிந்தார். — பரவாயில்லே. அடுத்த

தடவை பார்க்கலாம்! என்றார். — எல்லாரையும் கவனமா இருக்கச் சொல்லுங்க!

ரிஸீவரை வைத்தார்.

துரதிர்ஷ்டம்.

'கால்' உற்பத்தியாகும் இடத்தைக் கண்டுபிடித்தால் கேஸ் முடிந்துவிடும்.

என்ன செய்வது? அவ்வளவு சுலபத்தில் கேஸ் முடியுமா?

ரிகார்டரிலிருந்து கேஸட்டை எடுத்தார். தாம் கொண்டு வந்திருந்த ரிகார்ட் பிளேயரில் முடுக்கினார். விசையைத் தட்டினார்.

குருவும் குற்றவாளியும் பேசியது திரும்பிக் கேட்க ஆரம்பித்தது. சிங் உன்னிப்பாகக் கேட்டார்.

ஒவ்வொரு இடத்திலும் சிங் அதை நிறுத்தினார். பிறகு துவக்கினார்.

டேப் முடிந்ததும் திரும்பினார்.

—குரு! அடுத்த தடவை பேச்சை இன்னும் நீட்டணும்.

—எஸ் ஸார்.

—அதுக்கு வழி சொல்லித் தரேன். முதலிலே அவனுக்கு உதவி செய்யறேன், குறிப்பாக தப்புவதற்கு உதவி செய்கிறேன்னு சொல்லுங்க! மரண தண்டனை இல்லாமல் தப்பலாம்னு சொல்லுங்க! ஓகே?

—எஸ் ஸார்.

—அப்புறம் போலீசைப் பற்றி நிறைய குற்றம் சொல்லுங்க.

—எஸ் ஸார்!

—அது பேச்சை நீட்டிக்க ஒரு சுலபமான வழி.

—எஸ் ஸார்!

—அப்புறம் இன்னொரு விஷயம்.

—சொல்லுங்க ஸார்.

—போன மாதம் சம்பகாவைக் கொலை பண்ணியிருக்கானே,

—ஆமா!

—அதுக்கு விவரம் கேட்கணும். அதாவது அவன் சரியாகப் பதில் சொல்லாட்டி ஒரு நிரபராதி தூக்குக்குப் போயிடுவான்னு சொல்லுங்க!

—எஸ் ஸார்.

—கவனமா இருங்க!

—எஸ் ஸார்.

சிங் புறப்பட்டார் நேராக.

அன்று இரவு — ஆல் இந்தியா ரேடியோ தன் ஏழு மணி ஒலி பரப்பில் ஒரு அறிக்கை வெளியிட்டது.

'பொது மக்கள் கவனத்திற்கு! இந்த அறிக்கை முடிவானதும் நாங்கள் ஒரு டேப்பில் பதிவான குரலை ஒலி பரப்புகிறோம். அந்தக் குரலை உடையவர் யார்? எங்கிருக்கிறார்? என்பதை யாரேனும் தெரிந்தவர் நிலையத்துக்கு உடனே போன் செய்யவும். மிக்க நன்றி'.

பிறகு குற்றவாளி பேசியதை மட்டும் தனியாகத் தொகுத்து ஒலிபரப்பு செய்தார்கள்.

இரவே ஏதாவது தடயம் கிடைக்கும், யாராவது ஏதாவது சொல்வார்கள் என்று சிங் எதிர்பார்த்தார்.

அந்த ஆவலில் அவர் ரேடியோ நிலையத்திலேயே இரவு பதினொன்று வரை தங்கினார்.

யாரிடமிருந்தும் எந்த போன் அழைப்பும் வரவில்லை.

மறுநாள் காலையிலிருந்து ஆறுமுறை ஒலிபரப்பு செய்தார்கள். இரவு வரை எந்த பதிலும் வரவில்லை.

ஒலிபரப்பு மீண்டும் இரண்டு நாட்கள் தொடர்ந்தன.

சிங்கின் ஆவல் குறைந்து கொண்டே வந்தது.

அவர் உற்சாகம் குறைந்ததற்குக் தக்கபடி பதில் எதுவும் வரவே இல்லை.

அதே போல தினமித்திரன் ஆபீசுக்கு அந்த ஆசாமி போன் பண்ணவே இல்லை.

சிங் நிசப்தமானார். முதல் முயற்சி வீணாகப் போய் விட்டது என்று நினைத்தார்.

இனி வேறு வழியில் இறங்க வேண்டும்? என்ன வழி

சடலங்கள் இரண்டும் அகப்பட்ட இடங்களுக்குச் சென்றார். வெகு நேரம் வெவ்வேறு இடங்களில் நின்று சுற்றுப் புறங்களை ஆராய்ச்சி செய்தார்.

சுற்றியுள்ள குடியிருப்புகளைத் தேடினார். அவை வெகு தூரத்தில் இருந்தன. அங்கே போய் விசாரித்தபோது எந்த உதவியும் வரவில்லை. யாரும் யாரையும் சந்தேகம் கொள்ளும்படி பார்க்கவில்லை.

அந்தக் குடியிருப்புகளுக்குப் புதுநபர் யாரும் வரவில்லை.

சிங் யோசித்தார்.

கொலை செய்யப்பட்ட பெண்கள் வாழ்ந்த இடம் ஒருபுறம்: பின்னர் அவர்கள் 20 மைல் தொலைவுகளுக்குக் கொண்டு போகப் பட்டிருக்கிறார்கள்.

உயிரோடு கொண்டு போனாலும் சரி, இறந்த பின் எடுத்துச் செல்லப்பட்டாலும் சரி, அவ்வளவு தூரம் எப்படி அவன் அவர்களைக் கொண்டு போனான்? யாராவது பார்த்திருக்க மாட்டார்களா?

நிச்சயம் பார்த்திருப்பார்கள்.

அல்லது குற்றவாளி ஏதாவது வாகனம் உபயோகத்திருப்பானா?

இருக்கலாம் . .

அது ஒன்றுதான் நடக்கக் கூடியதாகத் தோன்றியது. மற்ற எதுவும் நடந்திருக்க முடியாது.
அப்படியானால் குற்றவாளி சொந்தமாகக் கார் வைத்திருப்பானா?

இருக்கலாம்.

மத்திய வர்க்கமாக இருக்கலாம். அல்லது மேல் மட்டமாக இருக்கலாம்.

அதனால் தான் அவன் மனம் திறந்து தான் ஒரு மன நோயாளி என்று கூற முடிகிறது.

மேல் மட்டம் மட்டுமல்ல! படித்தவனாகவும் இருக்க வேண்டும்.

அவனைக் கண்டு பிடிப்பது எப்படி?

ஐந்து தினங்கள் ஓடிவிட்டன.

ஆறும் நாள் அவரது உதவியாள் லிங்கும் மற்றும் அவர் சில விஷயங்களில் சில வித்தியாசமான அபிப்ராயங்களைக் கேட்க விரும்பும் மாலினியும் கூடினார்கள்.

சிங் தமது அனுமானங்களைக் கூறினார்.

மற்றவர்களின் அபிப்ராயங்களைக் கேட்டார்.

—ஸார்! என்றான் லிங். மாலினி ஏதாவது சொல்லு முன் அவன் சொல்ல வேண்டும் என்று ஆவல்.

—சொல்லு, லிங்!

—இரண்டு பெண்களும் வீட்டை விட்டு வெளியே வந்திருக்காங்க. கடத்தப்பட்டிருக்காங்க! எப்படி சாட்சி இல்லாமல் போச்சு!

மாலினி குறுக்கே புகுந்தாள்— சாட்சி எதுக்கு இருக்க

ணும்? 'கடத்தல்' நடக்கிறதுன்னு யாருக்காவது தெரிஞ்சாத்தானே அதைக் கவனிச்சிருக்கப் போறுங்க!

—ஏன் அந்தப் பெண் கத்தியிருக்காதா?

—கத்தி இருந்தா இதற்குள்ளே சாட்சி வந்திருக்கும்.

—அப்போ கத்தலேன்னு தெரியுது.

—அதற்குக் காரணம்?

லிங்க் பதில் சொல்லவில்லே.

சிங் குறுக்கிட்டார்—மாலினி இரண்டு பெண்களும் கடத்தல்காரனுக்குத் தெரிஞ்சவங்களாக இருப்பார்களா?

—ஸார்! விசாரணை நடந்தாச்சு! ஃபைல்லே ரிப்போர்ட் படிச்சாச்சு! இரண்டு குடும்பத்துக்கும் சேர்ந்த உறவினங்க, சிநேகிதங்க, இன்னும் பால்காரன், தயிர்காரங்க—ஆக எல்லா ஆள்களையும் லிஸ்ட் எழுதியாச்சு. இரண்டு பெண்களுக்கு தனித் தனி லிஸ்ட். இந்த இரண்டு லிஸ்ட்லே இருக்கும்படி எந்த ஆளும் கிடைக்கவில்லே.

சிங் யோசித்தார்.

—சரி, குடும்ப லிஸ்ட் எழுதியிருக்காங்க! பள்ளிக்கூடம், அங்குள்ள ஆண் டீச்சர்கள், மற்றும் பரிச்சயமானவர்கள் லிஸ்ட் தயாராகி இருக்கா?

—ஓ! அது கூட இருக்கு ஸார். இரண்டு பெண்ணும் வெவ்வேற ஸ்கூல். அதிலும் பொதுப்படையா ஒண்ணும் கிடையாது.

மாலினியின் 'டாண் டாண்'கள் லிங்க்கைத் திரை போட, சிங்குங்க்குப் பரவசம் கொடுத்தது.

—அப்போ! என்றார் அவர். —யாரோ ஒரு அன்னியன். திடீர்னு வந்து தாக்கி பெண்களைக் கடத்திட்டுப் போயிருக்கான்.

—ஆமாம் ஸார்! அதுதான் என் ஊகம். இருந்தாலும் இது ஒரு கடைசி டெஸ்ட். பண்ணிடலாம்.

—என்ன செய்யணும்?

—ரேடியோவுலே ரிக்கார்டிங் குரலேக் கேட்டாலும் நேரிலே கேட்டா வித்தியாசமா இருந்தாலும் இருக்கும். அதனாலே நீங்க டேப்பைக் கொடுத்தீங்கன்னு, இரண்டு பெண் வீட்டிலேயும் போட்டுக் காண்பிச்சு அவங்க அந்த குரலேக் கண்டு பிடிக்க முடியறதான்னு பார்க்கலாம்.

—குட்! அது ஒரு நல்ல ஐடியா! அதே போல செய்ய ஏற்பாடு பண்ணலாம். லிங்க், ஏதாவது யோசனே!

—யோசனே பஞ்சமா இருக்கு!

—ஒரு வேலே கொடுக்கிறேன், கவனி!

—எஸ் ஸார்.

—எல்லா போலீஸ் ஸ்டேஷன் ரிக்கார்டுகளேயும் ஒரு ஆறு மாதம் வரை கவனிச்சு, அதிலே எந்த ஆண் பேரிலாவது பெண் சம்பந்தமா ஏதாவது சின்னச் சின்ன கம்ப்ளெய்ண்ட் புக் ஆயிருக்கா பார்க்கணும்!

—எஸ் ஸார்!

—அதாவது பெண்ணிடம் வம்பு கிம்பு யாராவது பண்ணி யிருப்பாங்க! போலீஸ்லே எச்சரிக்கை பண்ணி விட்டிருப்பாங்க! அப் படி ஏதாவது கம்ப்ளெய்ண்ட்ஸ் வந்து, யாருக்கு எச்சரிக்கை கொடுத்திருக்காங்கன்னு பார்த்து அதைக் குறிச்சிட்டு வரணும்! முடியுமா?

—முடியும், ஸார்! குறிச்சிட்டு வரேன்!

—இந்த பெண்கள் ரெண்டு பேர் ஏரியாவிலே முக்கிய கவனம் வையுங்க.

—எஸ் ஸார்!

—மாலினி, நீங்க என்ன செய்யப் போறீங்க!
புன்னகையோடு திரும்பினுள் அவள். — நான் ஒரு விசாரணை எடுத்துக்கறேன், ஸார்!

—என்ன விசாரிப்பீங்க?

—இதப் போல பெண்மேலே யாராவது அக்கிரமமா நடந்து கிட்டா எல்லா குடும்பமும் புகார் பண்ணப் போயிடறதில்லே. அந்த விளம்பரத்தை விரும்ப மாட்டாங்க!

—ரைட்! பாதியும் அந்த கேஸ்தான்.

—நான் அதை நாசூக்கா ஒவ்வொரு வீட்டுக்கும் போய் விசாரிக்கிறேன். அதிலே ஏதாவது கிடைக்குமான்னு பார்ப்போம்.

—நல்ல ஐடியா! அதை உடனே செய்யுங்க என்முர் சிங்!

மேலும் நாட்கள் ஓட, துப்பு ஏதும் கிடைக்கவில்லே.

சிங் ஒரு ஏற்பாடு செய்தார், குருவை ரேடியோ மூலம் ஒலி பரப்பச் செய்தார்.

'தினமித்திரனில் என்னேடு தொடர்பு கொண்ட நண்பருக்கு, நான் இந்த ரேடியோச் செய்தி அனுப்புகின்றேன்.

நீங்கள் அப்பறம் போன் பண்ணவே இல்லே, உங்களுக்கு ஏதோ சங்கடம் இருக்கிறது போலத் தோணுகிறது.

என்னை உங்கள் நண்பனைக் கருதி, உங்கள் கஷ்டங்களை என் னிடம் சொல்லலாம். நான் என்னுல் முயன்றதை நிச்சயம் செய் வேன். எந்த உதவியானுலும், என்னைக் கேளுங்கள்; அவசியம் உதவி

செய்கிறேன்'

இந்த அறிக்கை காலேயிலும் மாலேயிலும் வாசிக்கப்பட்டது.

டி.வி.யிலும் குரு தோன்றி இதே அறிக்கையை வாசித்தான். இதற்கு பலன் ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்தான்.

முதல் நாள் எதுவும் தெரியவில்லே.

இரண்டாவது நாளும் தெரியவில்லே.

மூன்ருவது நாள் குருவின் மேஜையின் மணி அடித்தது. எல்லோரும் கவனம் ஆனுர்கள். சிங்கிற்கு வேறு ஒரு போன் வழியாகச் செய்தி பறந்தது.

குரு மெதுவாகத் தயங்கி போனே எடுத்தான்.

—ஹல்லோ! மிஸ்டர் குருவா?

—ஆமாம்.

—ரேடியோ டி.வி. எல்லாம் போட்டு வாங்கிறீங்க மகிழ்ச்சி. இப்போ நீங்க எனக்கு என்ன உதவி செய்வீங்க சொல்லுங்க.

—உங்களுக்கு என்ன மாதிரி உதவி தேவை சொல்லுங்க!

—அதை என்ன சொல்லமுடியும். முக்கால் வாசிப்போது நான் நல்லவன்.

—அது நல்லாத் தெரியுது. இல்லாட்டி போன் பண்ண மாட்டுங்க.

—எனக்கு நோய் எப்போவாவது வருது,

—அதைக்கூட குணமாக்க முடியும்.

—முடியும். நான் போலீஸ்ல அகப்பட்டுக்கிடுவேனே!

—நீங்கதான் போலீஸ் சீக்கிரம் வந்து உங்களேப் பிடிக்கணும்னு சொன்னீங்களே.

—இப்பவும்தான் சொல்றேன். ஆனுல் போலீஸ் வந்து பிடிக்கறதுக்கும், நானு வந்து சிக்கிக் கொள்றதற்கும் வித்தியாசம் இருக்குதில்ல. என்னதான் நினேச்சாலும், நானுக அகப்பட எனக்கு விருப்பம் இல்லே. போலீஸ் பிடிக்கட்டும். நான் ஒத்துக்கிறேன்.

—எங்கே இருக்கிங்க சொல்லுங்க.

சிரித்தான் அவன்— பலே ஆளா இருக்கிங்களே! அதை நானுகச் சொல்வேனு.

இந்த சமயம் சிங் உள்ளே அவசரமாக நுழைந்தார்.

—சொல்லவேண்டாம். ஒருசின்ன துப்பு கொடுங்க.

—அதுகூடகொடுக்க எனக்கு விருப்பமில்லே விட்டுடுங்க—

—சரி ஒரு நிரபராதியை விடுவிக்கணுமா இல்லையா?

—ஆமாம், அதை நான் போலீஸ்லே சொன்னேன். அவங்க நம்பத் தயாராயில்லே.

—ஏன் நம்பமாட்டேங்கிறாங்க?

நீங்க சொன்னீங்கன்னு சொல்றதுக்கு துப்பு கேக்கிறாங்க!

ஏதோ கேட்கிறாங்களா! சொல்றேன் அந்த பெண் சண்பகா நாயோடு இருட்டு வேளையிலே ரோட்டிலே நடந்து வந்தாங்க, அப்போ திடீர்னு நான் வந்து அவளை மடக்கிட்டுப் போயிட்டேன்.

—எப்படி கையாலே தூக்கிப் போக முடியுமா?

—கார் கொண்டு வந்தேன்.

—ஓகோ!

—அதிலே மடக்கிப் போட்டுக் கொண்டு போயிட்டேன். திருநீர்மலை தாண்டி ஒரு வயக்காட்டுக்குள்ளே இருட்டிலே கொண்டு போய் கொன்னுட்டேன்.

—ரைட். இதிலே துப்பு ஒண்ணுமே இல்லையே!

—சொல்றேன். அந்தப் பெண் கர்ச்சிப், கைப்பை ரெண்டையும் அங்கே முருகானந்தம் செங்கல் சூளை பக்கத்திலே பெரிய பள்ளம் இருக்கு அங்கே விட்டெறிஞ்சிருக்கேன். பாத்துக்க சொல்லுங்க!

—நாய் என்னாச்சு . .

ஒரே அடிலே கொன்னு ரோட்டிலே குளத்துக்கு முன்னாடி சின்ன பாலம் இருக்கு அதிலே போட்டிருக்கேன் பாருங்க!

—சரி பாத்துக்கிறோம் இன்னும் வேறு ஏதாவது துப்பு.

—வேற எதுவுமில்லே. அந்தப் பெண்தான் நான் கொல்றதுக்கு முன்னாடி ஒரு அட்ரஸ் கொடுத்து, நான் மறு ஜென்மத்திலே உங்களை மணப்பேன்னு லெட்டர் எழுதச் சொல்லி அழுதா!

—அட்ரஸ் என்ன?

—என்னவோ ராஜேந்தர். விக்டர் அண்ட் கம்பெனி, சென்னை மூணுன்னு சொன்ன ஞாபகம்.

—லெட்டர் எழுதினீங்களா?

—ஆ எழுதுவேனா! எழுதினா கையெழுத்துலேந்து போலீஸ் கண்டுபிடிச்சுக்குவாங்களே.

—சரி வேற துப்பு.

—எதுவுமில்லே, இதைச் சொல்லி அந்த ஆசாமியை உடனே சிறையிலிருந்து விடுவிங்க. போதும்.

டக் என்று தொடர்பு அறுந்தது.

—ஹலோ ஹலோ என்ருன் அவன். அங்கு பேச்சு இல்லே.

சிங் அவசரமாக இயங்கினுர். அடுத்த போன் சட்டென்று அடித்தது.

—மிஸ்டர் சிங். போன் கண்டு பிடிச்சிருக்கோம். விக்ரம் ரோட்லே ஒரு. பப்ளிக் 'பூத்! கிண்டி போற வழியிலே இருக்கு.

—ஒகே! தாங்க்யூ.

சிங் உடனே கீழே ஓடினுர்.

ஜீப் தயாராக இருந்தது. வொயர் போனே இயக்கி கண்ட்ரோலிடம் சொல்லி வரிசையாக அவ்வப்போது உதவி கோரினுர்.

ஜீப் பறந்தது.

கிண்டி அருகில் விக்ரம் ரோட்டை அடைவதற்கு இருபது நிமிடமாகியது.

அவர் எதிர்பார்த்தபடியே விக்ரம் ரோடு ஒரு ஒதுக்குப்புற சாதாரண ரோடாக இருந்தது.

இரு பக்கமும் மர அடர்வுகள். பூத் ஒரு ஓரத்தில் பைசாடவர் போல சாய்ந்து இருந்தது.

சிங் சருக்கென்று ஜீப்பிலிருந்து இறங்கினுர்.

நிச்சயம் குற்றவாளி அங்கே இருப்பான் என்று எதிர்பார்க்கவே இல்லே. பூத் காலியாக இருந்தது.

சிங் அதன் அருகில் சென்று, கைக்குட்டையால் கவனமாகக் கதவைத் திறந்தார்.

உள்ளே தரையில் உதிர்ந்த மலர் தவிர வேறு எதுவும் இல்லே. சின்ன துணுக்காக ஏதாவது கிடைக்குமா பார்த்தார். எதுவுமில்லே.

அடுத்து வெளியே சுற்றிப் பார்த்தார். பிறகு வெவ்வேறு திசைத் தொலேவில் பார்த்தார்.

எதுவும் கண்ணில் படவில்லே. சில நிமிடங்களில் இரண்டு போலீஸ் லாரிகள் வந்து சேர்ந்தன.

நாயை அழைத்து ஒரு லாரி வந்தது. பூத்தில் ஒரு நாயை விட்டு மோப்பம் பார்க்கச் செய்தார்கள். நாய் மோப்பத்தை இழுக்க சிரமப்பட்டது.

—ஸார் எடுக்காது போல இருக்கே என்ருர் ஹாண்ட்லர் பலமுறை ஏவி, அலுத்துவிட்டு.

சிங் யோசித்தார். ரிஸீவர் மீது அவர் கண். அதன் கார்

அடுத்த இதழில்


கோவி. மணிசேகரன்

எழுதும்...

# மோகினிக் கனவு

-சரித்திர நாவல்

விலை - 1-50



COMICS PDF TIMES
HSC



டைப் பிடித்து தூக்கி, ரிஸீவரை கைத்தொடாமல் கீழே இறக்கினுர். ரிஸீவரை மோப்பம் பிடிக்கச் சொன்னுர்.

ஹாண்ட்லர் ஏவினுர். நாய் முயற்சித்தது. சில முயற்சிகளுக்குப் பிறகு மூக்கைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கியது. பிறகு ஒருபுறம் இழுக்க, ஹாண்ட்லர் பின்னுல் போக சில கான்ஸ்டபிள்களும் நடந்தார்கள்.

நாய் ஸாம்ஸன் சிறிது தூரம் போய் பிறகு சாலையைவிட்டு வலதுபுறம் இறங்கியது.

தரிசான நிலத்தில் ஓடி தோட்டத்தை அடைந்தது. அதைச் சுற்றியவாறு சென்று மற்ருெரு தடத்தைப் பிடித்தது.

அதிலே சென்று கடைசியில் டிரங்க் ரோட்டை அணுகியது.

அதில் வந்து நின்று இரு பக்கமும் பார்த்தது.

ஹாண்ட்லர் அதையே கவனித்திருக்க சிங் ஆர்வத்தோடு நின்ருர். நாய் சில ஜாடை அடிகளை எடுத்து வைத்து திரும்பியது.

ஹாண்ட்லர் பலமுறை ஏவினுர். கடைசியில் அது சுருண்டு படுத்தது.

சிங் யோசித்தார். அவருக்குப் புரிந்துவிட்டது. அந்த இடத்தில் குற்றவாளியின் கார் நின்றிருக்க வேண்டும். அதில் ஏறி போய் இருக்க வேண்டும்.

சிங் திரும்பினுர். எல்லோரும் பூத் பக்கம் வந்தார்கள். ஃபோரன்சிக் அதிகாரிகளும் வந்திருந்தார்கள். சிங் அவர்களை நோக்கி—இந்த பூத் உள்ளே தரையிலே மண் உதிர்ந்திருக்கு. மிஸ்டர் வெங்கட், இதை எடுத்து கொஞ்சம் அனலைஸ் பண்ணிஞ தேவலை என்ருர்.

—செய்திருவோம் என்ருர் வெங்கட்ராம். அதற்குள் கைரேகை நிபுணர் பூத்தின் கதவு, ஹாண்டில், போன் ரிஸீவர் எல்லாவற்றிலும் பொடி தூவிப் பார்த்தார். தெளிவாக ஒரு கைரேகையும் அவருக்கு கிடைக்கவில்லை.

கிடைத்த ஒரு பாதிரேகை குற்றவாளியுடையதாகத்தெரியவில்லை.

சிப்பந்திகள் சின்ன பிரஷ் சகிதம் வந்து தரையில் கிடந்த மண் துகள்களை மெதுவாகப் பெருக்கி ஒரு பிளாஸ்டிக் பைக்குள் போட்டார்கள்.

—வேறே ஏதாவது செய்யணுமா?— இல்லை புறப்பட வேண்டியதுதான் என்ருர் சிங்.

வண்டிகள் புறப்பட்டன.

சிங் யோசித்தார். கேஸ் வெகு விசித்திரமாக நகர்ந்து கொண்டிருந்தது.

அவன் படித்தவனுக இருப்பான். அதனுல் தன் அறிவை உபயோகித்து போலீசை மடக்கப் பார்க்கிருன்.

இன்னும் எத்தனை நாள் அவனுல் முடியும். பார்ப்போம் என்று நினைத்தார்.

மறுநாள் குற்றவாளியிடமிருந்து மற்ருெரு கால் வந்தது. மணி பன்னிரண்டு.

யாரும் அதை எதிர்பார்க்கவில்லை. சிங் தினமித்திரனுக்கு வரவில்லை.

குரு ரிஸீவரை எடுத்தபோது மறுமுனையில் குரல் கரகரத்தது.

—மிஸ்டர் குருவா?

—ஆமாங்க!

—நான் நேத்து பேசினேனில்லே! அதிலே சின்ன தப்பு பண்ணிட்டேன்.

—சொல்லுங்க!

—நாய்க் குட்டியை எங்கே போட்டேன்னு கேட்டீங்க! சின்னப் பாலத்து அடியிலேன்னு சொன்னேன். அது ஒரு பொய்.

—பொய்யா! நீங்க அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் இருந்திருக்காதே!

—அவசியம் வந்திச்சு! காரணம் சொல்றேன். நீங்க போலீஸ் கிட்டே சொல்லி அவங்க என்னைத் தேடி வராங்க. நேத்து என் போன் கால் முடியல்லே! என்னைத் தேடி வந்துட்டாங்க!

—நீங்க அங்கே இருந்தீங்களா?

—இல்லே. தூரத்திலேருந்து கவனிச்சேன். இப்படி போலீஸ் என்னை உடனே தொடர்ந்ததுனுலே நான் உண்மையை இந்த விஷயத்திலே மறைச்சேன்.

—சம்பகாவை நீங்கதானே முடிச்சீங்க.

—ஆமா. அதை ஒத்துக்கறேன். ஆனு நாயைப் போட்ட இடத்தைச் சொல்ல விரும்பல்லே! காரணம் அங்கே என் கார் டயரோட தடம் பதிஞ்சிருக்கு!

—அத வச்சே போலீஸ் என்னைக் கண்டு பிடிச்சிடுவாங்க. யமகாதகங்க! அதனுலே பொய் சொன்னேன்! நாயைப் போட்ட இடத்தை நான் சொல்ல விரும்பலே! இதை இப்போ ஏன் சொல்ல வந்தேன்னு கேட்டீங்கன்ன, இதைக்காரணம் காட்டி முத்துராமை விடுதலை செய்யாம இருந்துடப் போருங்க.

—இல்லே! அதைக் கவனிச்சுக்கிருேம். நீங்கதான் வேறே துப்பு கொடுத்துட்டீங்களே!

—அப்புறம் என்னால போன் பண்ண முடியாது. போன் வழியா என்னைக் கண்டுபிடிக்க வர்றீங்க! அதனாலே இதோட போன் தொடர்பு குளோஸ்! வணக்கம்!

டக்கென்று ரிஸீவர் வைக்கப்பட்டது.

சிங்குக்குச் செய்தி போனது. அவசரமாக வந்தார். அவர் வருவதற்கும் போன் அதிகாரி அவரை அழைப்பதற்கும் சரியாக இருந்தது.

—ஸாரி! ஸார்! இந்தக் 'காலை' நாங்கள் பின்பற்ற முடியலே. ரொம்ப சுருக்கமான நேரம்! என்றார் அதிகாரி.

சிங் டேப்பை எடுத்துக் கொண்டார்.

தற்காலிகமாக எல்லோரிடமும் விடை பெற்றார்.

ஆபீசுக்குப் போனதும் அவருக்குக் கவலை பிடித்தது.

இதுவரை அவருக்கு வசமான துப்பு எதுவும் கிடைக்கவில்லை.

லிங்க், மாலினி அனுப்பியுள்ள குறிப்புகளைப் படித்துப் பார்த்தார்.

வகையாக எதுவும் கிடைக்கவில்லை.

கேஸ் அவரைப் பொறுத்தவரையில் கொஞ்சம் விசித்திரமாக இருந்தது.

போனில் எந்தக் குற்றவாளியும் இவ்வளவு தைரியமாகப் பேசவில்லை. இவ்வளவு மனம் திறந்தும் பேசியதில்லை.

ஒருவேளை இப்படி இவன் சொல்வதெல்லாம் போலீஸைத் திசை திருப்பத்தானோ?

முத்துராம் விஷயம் நினைவுக்கு வந்தது. எழுந்தார்.

அவரையாவது வெளிக் கொணரலாமே என்று நினைத்தார்.

ஜீப்பை எடுக்கச் சொல்லி புறப்பட்டார்.

கிராண்ட் டிரங்கில் பறந்து பல்லாவரத்தைத் தாண்டியதும் வலது புறம் திரும்பினார்.

இப்போது அங்கெல்லாம் காளான் போல காலனிகள் முளைத்து விட்டன.

இடங்களைக் கண்டு பிடிப்பதே கஷ்டமாக இருந்தது.

குற்றவாளி தந்த குறிப்புகளை வைத்துக்கொண்டு அந்த இடத்தை அடைவதற்கு அரை மணி ஆகியது. ஜீப்பை ரோட்டில் நிறுத்தினார். பிறகு நடந்து போக ஆரம்பித்தார்.

பதினைந்து நிமிடம் அலைய வேண்டி வந்தது. கடைசியில்

அவர் அடைந்த இடங்களில் நானுவித கோடை மரங்களும் வளர ஒருவித வெப்ப நிழல் எங்கும் விரிந்திருந்தது. அவர் உடல் வியர்க்க அந்த இடத்தை குறுக்கும் நெடுக்குமாக ஒரு முறை போய் வந்தார்.

அவருக்கு எந்த தடயமும் கிடைக்கவில்லை. பார்வையால் அநேகமாக எல்லா இடத்தையும் பார்க்க முடிந்தது.

ஒருவேளை, குற்றவாளி அவர்களை ஏமாற்றுகிருனே?

போலீஸை வழி திருப்புவதற்காகவும் அவன் தப்புவதற்காக அவகாசம் கிடைப்பதற்காகவும் குற்றவாளி பொய் சொல்லுகிருனே?

சிங் குழம்பினர்.

இருந்தும் மனம் தளரவில்லை. தமது கடமை அவன் சொன்ன விஷயத்தை ஓரளவு சோதித்துப் பார்த்துவிட வேண்டியது. மெதுவாக அடிமேல் அடி வைத்து நடந்தார்.

ஒரு செத்தைக் கூளத்தை மிதித்தபோது, கால் சற்று அமிழ்ந்து பல அங்குலங்கள் கீழே இறங்க ஒரு யோசனை உதித்தது.

ஒருவேளை, இந்த கூளத்தில் எங்கேயாவது அது மறைந்திருக்குமோ?

தவிர சம்பகா கொலை நடந்து எத்தனை மாதங்கள் ஆகிவிட்டன! இன்னமும் அவளது பையோ வேறு உடமையோ, இங்கு இருக்குமா? யாராவது எடுத்துப் போயிருக்க மாட்டார்களா?

ஆனல் ஒன்று!

அந்த இடத்தைப் பார்த்தால் சாதாரணமாக மனிதர்கள் அணுக முடியாத ஓரமாக இருக்கிறது! அதனல்......

பொறுமையை இழக்க விரும்பவில்லை. கீழே இருந்து ஒரு நீண்ட குச்சியை எடுத்துக் கொண்டார். எங்கெங்கே கூளங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் சென்று குச்சியால் அதைக் கிளர்ந்து விட்டார். ஒரு இடம் விடவில்லை. கடைசியில் அந்தத் தென் மேற்கு மூலையில் அந்த இடம் சற்று குழியாக இருந்தது. செத்தைகள் மண்டியிருந்தன. மெதுவாக அவற்றைக் கிளேக்க ஆரம்பித்தார்.

அழுத்திய குச்சி நகர மறுத்தது. எதோ தடை எதிர்ப்பட்டது.

சிங் உடனே காய்ந்த மரச்சருகுகளை எடுத்து வந்தார். பூமியைத் தோண்ட ஆரம்பித்தார்.

சில அங்குலங்கள் போவதற்குள் அந்த பட்டை கிடைத்தது. தோள் பட்டை! அதை இழுக்க பட்டை அறுப்பட்டது. திரும்பவும் அவர் மண்ணைத் தோண்ட வேண்டி வந்தது.

கடைசியில் முழு பிளாஸ்டிக் கைப்பை வெளியே வந்

தது. மண் ஒட்டியிருந்தாலும் புதுசாக இருந்தது. பட்டனைத் திறந்தார். உள்ளே பார்க்க அங்கே அத்தனை பொருள்களும் அப்படியே இருந்தன.

பர்ஸில் ஒரு கார்ட் இருந்தது. அதில் சம்பகாவின் விலாசம் . பார்த்ததும் சிங்குக்கு நிம்மதி, நல்லவேளை இது போதும் முத்துராமை விடுதலையாக்க!

உள்ளே சில கடிதங்கள், பவுடர் பெட்டி, சின்னக் கண்ணாடி, ரயில்வே பாஸ், ஒரு புடவை விளம்பரம், நெயில் பாலீஷ், பால் பாயிண்ட் பேனா ..

ரைட்! குற்றவாளி பொய் சொல்லவில்லை!

பிறகு கர்ச்சிப்பைத் தேடினார். மேலும் சில தோண்டல்களுக்குப் பிறகு அது கிடைத்தது. மண் கலந்து சுருண்டு, ஒரு கட்டிப் பொருள் போல கிடந்தது. தண்ணீரில் போட்டால் சரியாகும்.

நாய்!

அந்த நாய் எங்கே!

அதை எங்கேயாவது கண்டுபிடித்தால் குற்றவாளி சொன்ன அந்த டயர் தடயமும் தென்படலாம்.

அதற்கு நிறைய முயற்சி தேவை!

சிங் நகரம் திரும்பினார். முதன் முதலில் அரசு ப்ராஸிக்யூட்டரை நாடினார். கோர்ட்டில் சம்பகா கொலை வழக்கை மீண்டும் விசாரிக்கும்படி மனு தயாரிக்கக் கேட்டுக் கொண்டார். கோர்ட் விசாரித்து முத்துராமை விடும்வரை சிறையில் அவருக்கு வாழ்க்கை கஷ்டமில்லாமல் வசதியாக இருக்கும்படி சிறை அதிகாரியையும் கேட்டுக் கொண்டார்.

மறுநாள் சிங்குக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. முந்திய நாள் இரவு பதினொரு மணிக்கு துளசி என்கிற பெண்ணின் தந்தை தமது 12 வயது மகளை மாலை நான்கு மணியிலிருந்து காணவில்லை என்று சூரிவாக்கம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்திருந்தார்.

இரவில் முதல் விசாரணையை முடித்த இன்ஸ்பெக்டர் ராமதாஸ், அதன் முக்கியத்துவத்தை அறிந்து, சிங்குக்கு அறிவிப்பதற்காகக் காத்திருந்தார்.

காலையில் ஏழு மணிக்கு சிங்குக்கு போன் போட்டுத் தெரிவித்தார்.

சிங் விஷயத்தைக் கேட்ட பிறகு சிறிது நேரம் நிசப்தமாக இருந்தார்.

அவருக்கு ஒரு கவலை!

இந்தக் கடத்தல்கள் ஒரு பொது ஜன பீதிக்கு வழி

வகுத்து விடுமோ?

ஏற்கெனவே அவரது வேண்டுகோளின்படி பத்திரிகைகள் இந்தக் கடத்தல்களை கீழ் சுருதியில் பிரசுரித்துக் கொண்டிருந்தன. எத்தனை நாள் அப்படிச் செய்வார்கள்!

அதே நேரத்தில் பெண்ணின் பாதுகாப்பு பற்றி அவருக்கு ஒரு கவலையும் இருந்தது.

இப்படியே விட்டுக் கொண்டு போனால்....

கமிஷனர் பத்திரிகைக்காரர்களைச் சந்திக்கும் போது எச்சரிக்கை ஒன்றை அதிகப் பரபரப்பில்லாமல் விடும்படி சிங் கேட்டுக் கொள்ள நினைத்தார்.

ஒரு காரில் ஒரு மன நோயாளி உலாவுகிறான். அவன் பிடிப்பதெல்லாம்...... எத்தனை வயதுப் பெண்கள்?

மாலதி, லதாமணி, துளசி மூன்று பேரும் 12, 13, 14 வயதில் இருப்பவர்கள். சம்பகா? சம்பகா மட்டும் 20 வயது. ஆனால் சின்னப் பெண் போல தோற்றமளிப்பாள் என்று ஃபைலில் குறித்திருக்கிறது.

இன்னொன்றும் நினைவுக்கு வந்தது.

சடலம் கிடைத்த பிறகு சோதித்ததில் மாலதி கற்பழிக்கப் பட்டிருந்தாள்.

அடுத்து லதா மணியும் கற்பழிக்கப்பட்டிருந்தாள்.

ஆனால் சம்பகா! ..

ஃபைலில் அவளது போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் பல சுவாரஸ்ய விஷயங்கள் இருந்தன.

சம்பகாவின் பெண்மைப் பகுதியை டாக்டர் சோதித்திருந்தார்.

மேலே ரோமங்கள் நிறையக் கலைந்திருந்தன.

அந்த ரோமங்களை குற்றவாளி வலுவோடு கலைத்திருக்கிறான்.

இது குறிப்பாக உடல் உறவுக்கு ஆயத்தம் பண்ணிய நேரத்தில் நடந்திருக்கலாம்.

அல்லது கையாலேயே இந்தக் கலைப்பை உண்டாக்கியிருக்கலாம்.

பொதுவாக இந்த ரோமங்கள் சுருள் சுருளாக இருக்கக் கூடியவை. அவைகளில் நல்ல கணிசமான அளவு ரோமங்கள் தங்கள் சுருளை அவிழ்த்துவிட்டுக் கலைந்திருந்தன.

க்ளிடோரிஸ் பகுதிக்கு சற்று மேலே ஒரு கீறல் இருந்

தது. கை நகம் இருக்கலாம். அல்லது வேறு கூர்மை உலோகமாக இருக்கலாம்.

தவிர, ஸ்பெகுலம் உபயோகித்து, பெண்மையின் உட்பகுதிகளைப் பெரிதாக்கி, சுற்றிவர இருந்த மெம்ப்ரேன்களிலிருந்து 'ஸ்வாப்' எடுத்திருந்தார் டாக்டர்.

உள்ளே கசிவுகளைத் துடைத்து வந்த ஸ்வாபைச் சோதித்து ஆண் வீரியத்தின் ஸ்பெர்மடோஸாவா இருக்கிறதா என்று பார்த்தார்.

இந்த அணுக்கள் உடல் உறவு நடந்த இரண்டு மூன்று நாட்கள் வரை உயிரோடு இருக்கும்.

இறந்தவர்களுக்கு உடல் உறவு நடந்திருக்கிறதா என்பதைப் பார்க்க அது ஒரு முக்கிய வழி.

இந்த நடவடிக்கைகளை எடுத்திருந்த டாக்டர் தமது ரிப்போர்ட்டில்,

'இறந்து போன பெண் (சம்பகா)ேணாடு உடல் உறவுக்கான முயற்சி நடந்திருக்கலாம். ஆனால் உடல் உறவு நடக்கவில்லை

என்று எழுதியிருந்தார்.

இந்த செய்திகள் நினைவுக்கு வர சிங் யோசித்தார்.

சிங்குக்கு கொஞ்சம் நெருடல் ஏற்பட்டது.

பன்னிரண்டு வயதுடன் உறவு நடந்திருக்கிறது.

இருபது வயதுப் பெண்ணுடன் அது நடக்கவில்லை.

இதிலிருந்து ஏதாவது பெரிய ஊகம் ஒன்றை வரவழைக்க முடியுமா?

என எழுந்தார்.

அறையில் மேலும் கீழும் உலாவத் தொடங்கினார்.

இந்த அற்பமான வித்தியாசத்தில் ஒரு பெரிய ஊகத்தைக் கட்டிடம் எழுப்ப முடியுமா?

எதேச்சையாகக் கூட இது நிகழ்ந்திருக்கலாம்.

அது இல்லை என்றால் . .

குற்றவாளி மன நோயாளி என்றானே! இதுதான் அவன் நோயாக இருக்குமா?

ஏன் இருக்கக் கூடாது!

அவர் மனோதத்துவத்தில் நிறைய வாசித்திருக்கிறார்.

எத்தனையோ வித கேஸ்களைப் படித்திருக்கிறார்.

சிலரின் ஸெக்ஸ் கொடூர வகையாக இருக்கும்.

அல்லது வக்கிர வகையாக இருக்கும்.

சிலர் பெண்களைத் துன்புறுத்தித்தான் ஸெக்ஸ் உணர்ச்சி களை அடைவார்கள்.

சிலர் தங்கள் மனைவியாயிருந்தாலும் கிட்டத்தட்ட ஒரு பலாத்காரத்தின் சூத்திரம் முழுவதும் உபயோகித்தால்தான் உணர்ச் சியினை அடைவார்கள்.

சிலர் குயுத்தியான பாஸ்சர்களில்தான் உணர்ச்சி வசப் படுவார்கள்.

சிலருக்கு அவசியம் ஏதாவது உடல் உறவுப் படங்களைப் பார்த்தாக வேண்டும்.

சிலருக்குப் பெண்ணின் ஆடைகளை முதலில் நுகர வேண் டும்.

சிலருக்கு உள் ஆடைகளின் வாடை முதலில் படவேண்டும்.

இப்படி வக்கிரங்கள் ஒன்று இரண்டா?

ஆயிரக் கணக்கானவை அவை.

யோசித்தால் மனிதனுக்கு மனிதன் தனித் தனியான வக் கிரம் இருக்குமோ என்னவோ?

பருவ வயது வந்தும் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி உடல் உறவுகளை வெகு காலமாகத் தள்ளிப் போடுவதால், மனித மனங்களில் ஏராளமான வக்கிரங்கள் முளைத்து வருகின்றன என்று மனோ தத்துவ வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள்.

இப்படி நெடு நாள் தள்ளிப் போட்டு முதலிரவு காண் கிறவர்கள் அந்த ஆரம்ப இரவிலேயே பிரச்னைகளாக மாறி விடு கிறார்கள்.

இப்படியும் இன்னும் பல இனம் காணமுடியா காரணங் களும் சேர்ந்து பிரச்னையாக மாறியவர்களில் இந்தக் குற்றவாளி எந்தத் தட்டில் இருக்கிறானோ?

இந்தக் குற்றவாளியின் வக்கிரங்கள் என்னவோ?

அவைதான் இந்தக் கொலைகளாகப் பரிணமிக்கின் றனவோ!

சிங் யோசித்து யோசித்து உலாவினார்.

பிறகு,

சிங்கின் எண்ணம் இன்னும் சிதறியது. மனோ தத்துவ கேஸ்கள் இன்னும் பல நினைவுக்கு வந்தன.

யௌவனமான இருவர் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் காதல் பதினான்கு வயதிலேயே ஆரம்





இவ்வளவு இரக்கம் உள்ள நீங்கள் நிச்சயம் இன்னொரு கொலை செய்து விடாதீர்கள்!

இப்போது இழுத்து போயிருக்கும் துளசியை எந்த தீங்கும் செய்யாது விட்டு விடவும்.

நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். இந்த தடவை துளசியை மட்டும் உயிரோடு விட்டுவிட்டால் உங்களுக்கு போலீசிடம் சொல்லி மன்னிப்பு வாங்கித் தருவேன். அவர்கள் உங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுத்து கொள்ளாமல் பார்த்துக் கொள்வேன்.

இது வெறும் வார்த்தையே அல்ல, உண்மை!

வழக்கம் போல பல இடைவெளிகளில் இந்த அறிக்கை வாசிக்கப்பட்டது.

இந்த அறிக்கைக்குப் பலன் ஏதாவது இருக்குமா?

சிங்குக்குப் பாதி சந்தேகம். இருந்தும் எந்த உபாயத்தையும் விட்டுவிடக்கூடாது என்று அறிக்கை விட ஏற்பாடு செய்திருந்தார்.

முதல் நாள் பதில் இல்லை.

இரண்டாம் நாளும் இல்லை.

மூன்றும் நாளும் இல்லை.

அதே நேரத்தில் சிங் இந்த மூன்று நாட்களிலும் ஒரு பெரும் படையையே அனுப்பி குற்றவாளியின் இருப்பிடத்தைத் தேட ஆரம்பித்தார்.

குறிப்பாக மற்ற இரு சடலங்கள் கிடைத்த இடம், குற்றவாளி போன் பேசிய இடம், இதன் சுற்றுப் பிரதேசங்கள் அனைத்தையும், யூனிபாரம் அணியாத போலீசார் கோதி எடுத்தார்கள். புறநகர் பகுதியில் அனேக கிராமங்கள் சோதிக்கப்பட்டன. பூட்டிய வீடுகள், காலியான ஷெட்டுகள், பாழ் கட்டிடங்கள் எல்லாவற்றையும் தேடினார்கள்.

குற்றவாளி அகப்படவில்லை.

மூன்று நாட்கள் தாண்டிய பிறகு சிங்குக்கு நம்பிக்கை போய்விட்டது.

இனி துளசி உயிரோடு இருக்கமாட்டாள் என்று நினைத்தார்.

அதே நேரம் அவருக்கு ஒரு ஆத்திரமும் எழுந்து கொண்டிருந்தது.

ஒரு செயற்கையாக உண்டாக்கப்பட்ட மரணத்தை அவர் விரும்புவதே இல்லை.

அதுவும் இளம் பெண்கள் இப்படி ஒவ்வொருவராக இறந்து கொண்டே வருவதா?

காலையில் சிங்கின் ஜீப் புறப்பட்டது திருநீர்மலையின் சாலையை நோக்கி.

நாற்பது நிமிடத்தில் ஸ்தலத்தை அடைந்தார்.

பல்லாவரத்திலிருந்து வலது புறம் திரும்பி அந்த கிராமப் பாட்டையைப் பிடித்து ஜீப்பை முன்பு நிறுத்தியிருந்த இடத்தில் நிறுத்தினர். தூரத்தில் மலைமேல் போனூர் முருகன் கோவில் தெரிந்தது.

சம்பகாவின் கைப் பையைக் கண்டுபிடித்த மேட்டுக்குச் சென்றார்.

வெறும் தரிசை நிலச் செடிகளுடன் பரந்திருந்த மேடு அது!

இப்போது அவர் இங்கே ஒரு நம்பிக்கையில் வந்திருந்தார்.

சம்பகாவின் நாயை குற்றவாளி எங்கே போட்டிருந்தான் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

சம்பகா தனது நாயோடு மாலையில் உலாவச் சென்ற போது கடத்தப்பட்டு விட்டாள்.

நாயைப் பற்றிப் பேசும் போது குற்றவாளி, முதலில் ஒரு இடத்தைக் குறிப்பிட்டுவிட்டு, பிறகு அது இல்லை என்று சொல்லி, உண்மையில் நாயைப் போட்ட இடத்தைச் சொல்ல முடியாது அங்கே அவனது கார் டயர் கோடுகள் பதிந்திருக்கின்றன என்று கூறிவிட்டான்.

இப்போது அந்த இடத்தைக் கண்டு பிடித்தால், டயர்ப் பதிவுகளைக் கண்டுபிடித்து அதன் மூலம் குற்றவாளியைச் சீக்கிரம் கண்டு பிடித்துவிடலாம்.

நாயை எங்கே போட்டிருப்பான்?

காருக்குள்ளேயே அதைக் கொன்ருனு? அல்லது வெளியே கொண்டு போய் கொன்றுவிட்டு எறிந்தானு?

கைப்பையை இங்கே போட்டவன் நாயையும் இந்தப் பிராந்தியத்தில்தான் போட்டிருக்க வேண்டும்.

எங்கே போட்டிருப்பான்!

சுற்றிவரப் பார்த்தார்.

இன்னும் வீடுகட்டும் முயற்சிகள் இவ்வளவு தூரம் வரவில்லை. தூரத்தில் ஒரு சில புதுக் கட்டிடங்கள் கிளம்புவது தெரிந்தது.

தெற்குப் பக்கத்தில் திரும்பியபோது அந்த தொலைவில் அந்த கரிய நிழல் தெரிந்தது.

முதலில் அது அவர் கவனத்தை கவரவில்லை. ஆனால் நிழல் சலனமிட்டதும் யோசித்தார். சற்று கூர்ந்து கவனித்தார். புரிந்தது. ஒரு பையன் கீழே குனிந்து எதையோ பொறுக்கிக் கொண்டிருந்தான்.

வெகு நேரம் ஒரே இடத்தில் இருந்ததால் வெறும் நிழல் போலத் தோன்றினான்.

சிங் அவனை நோக்கி நடந்தார். வழி சரியாக இல்லை. கரம்பை நிறைந்த பாதை! தட்டித் தடுக்கிட வேண்டி வந்தது. சில புதர்களில் ஊடுருவ வேண்டும். தாண்ட முடியாது!

சிங் பொறுமையோடு போனார். இங்கே எங்கேயாவது ஒற்றையடிப் பாதை இருக்கலாம். அதை எங்கே போய்த் தேடுவது?

காலடி கேட்ட பிறகுதான் பையன் நிமிர்ந்தான். அவ்வளவு நேரம் அவன் குனிந்தே இருந்தது ஒரு சாதனையாகக் கூட இருக்கும்.

முதல் பார்வையில் திடுக்கிட்டான். திடீரென்று அந்த வெற்றுப் பிரதேசத்தில் அவ்வளவு அருகில் ஒரு ஆளை எதிர் பார்த்திருக்க மாட்டான்.

ஒரு அடி பின்னால் வாங்கி பாலன்ஸ் பண்ணி நின்றான்.

—தம்பி! என்ன பொறுக்கறே?

—'கள்ளக் காய்' என்று தொனிக்கும்படி என்னவோ சொன்னான்.

— என்ன காய்?

திரும்பவும் அதே தொனியில் அதையே சொல்ல, சிங் அதை விடுத்தார்!

—வீடு எங்கே?

—அங்கே கரிசலாம்பாக்கம்.

—இங்கே தினம் வருவாயா?

—எப்பவாச்சியும், காய் பொறுக்க வருவேன்.

—இந்தப் பக்கம் சனங்களே வரமாட்டாங்களே!

—ரொம்ப ஒதுக்குப்புறம் ஸார்!

—அப்புறம் இங்கே என்ன இருக்கு?

—என்னைப் போல யாராவது பட்டணத்து ஆசாமி இங்கே வந்து பார்த்திருக்கியா?

—யாராவது நிலம் பார்க்க வருவாங்க ஸார்! ரெண்டு

மூணு பேரா!

—தனியா வந்து பார்த்ததில்லையா!

—இல்லை ஸார்!

—இங்கே எப்பாவாவது ஒரு நாய் செத்துக் கிடந்ததா?

பையன் கண்களை இடுக்கி அவரைப் பார்த்தான்— நாயா? குட்டி நாயா?

—ஆமாம்!

—ரொம்ப நாளைக்கு முன்னுடி ஸார். ஒரு வெள்ளைக் குட்டி ஸார்! ஒரே மயிரு! மூக்கு மூஞ்சி எல்லாம் மூடிட்டிருந்திச்சு! அதோ அந்தக் கோட்டாஞ் செடி இருக்கில்லே, அங்கே கிடந்திச்சு!

சிங்குக்கு தீ பற்றியது.

— நீ கொஞ்சம் வந்து காட்டிறியா!

பையன் தலையைச் சிமிட்டினுன்.

முன்னுல் நடந்தான்.

—நீ எப்படி கண்டு பிடிச்சே தம்பி! என்முர் சிங் அவன் பின்னுல் நடந்துகொண்டு,

—வீச்சம் எடுத்தது ஸார்! நான் போயி பார்த்தேன். நாய் கிடந்தது ஸார்! ஒரு வாரமா நாறித்து..

பையன் அப்படியும் இப்படியும் ஒரு பர்லாங் இழுத்துப் போனுன்.

கிழிந்த நிஜார்தான் ஒரே துணி. காலில் செருப்பு இல்லாமல் ரொம்ப சுபாவமாக நடந்து போனுன்.

காலை வெய்யில் ஏறி இருந்தது. சிங்குக்கு வியர்த்தது.

ஏதோ விதத் தரிசை நிலச் செடிகள் அடர்ந்து ஒரு அம்புலி போல் வளைவாக வியாபித்திருந்தன.

அவற்றை விலக்கிப் போக வேண்டி வந்தது. நடம், கிடம் எதுவுமில்லை.

பையன் போகும் வேகத்தை அவர் பின்பற்ற முடியவில்லை.

செடிக் கிளைகளை தள்ளிப் போவது கஷ்டமாக இருந்தது.

கடைசியில் பையன் நின்முன். சிங் ஆவலோடு போய்ப் பார்க்க ஒரு சிறு வெட்ட வெளியில் அவன் காண்பித்த இடத்தில் ஏதோ கிடந்தது.

அருகில் போய்ப் பார்த்தார்.

சின்ன எலும்புக் கூண்டு, விலா எலும்புகளோடு இருந்தது! தலை இல்லை. ஏதாவது ஐந்து அல்லது பறவை கொத்திப் போயிருக்க வேண்டும். கீழே தரை இன்னும் கறையோடு கிடந்தது. நாயின் சடலம் அழுகி அதன் துர்நீர் கீழே பரவி இருக்க வேண்டும். இப்போது காய்ந்து மண்ணின் நிறத்தை மாற்றியிருந்தது.

அது என்ன! காய்ந்த தோலா? சிங் கீழே குனிந்தார். இரு விரல்களை இடுக்கி போல வைத்து வெளியே எடுத்தார்.

ஒரு அதிசய மகிழ்ச்சி!

அது கழுத்து பெல்ட்! நாய்க்கு சம்பகா போட்டிருக்கிருள். நாலு சின்ன துவாரங்களோடு காய்ந்து கருஞ் சருகாய்க் கிடந்தது. பக்கிள்ஸ் நன்ருக கறுத்திருந்தது.

அதை நுனி விரலால் எடுத்து பையுள் போட்டார். லாபரட்டரிக்கு அனுப்பிப் பார்க்கலாம்.

இது போதும்! நிச்சயம் முத்துராமை விடுதலை செய்து விடலாம்.

அது ஒரு புறம் இருக்கட்டும்!

எங்கே அந்த டயர்ப் பதிவு!

சுற்றிலும் பார்த்தார். எங்கேயும் தெரியவில்லை.

—தம்பி என்ருர். பையன் பின்னம் பக்கத்தைச் சொரிந்தவாறு திரும்பினுன்.

—இங்கே எங்கே ரோட் இருக்கு?

—அந்தப் பக்கம் ஸார்.

—திசையைக் காட்டினுன்.

அவன் காட்டிய திசையை நோக்கி நடந்தார் கீழே கால் பார்த்துக்கொண்டே. குறுக்கே அந்த கோட்டாஞ் செடிகள் வந்தன.

இவை அத்தனையையும் கடக்க வேண்டுமா?

அப்போது அந்த வித்தியாசம் அவர் கண்ணில் பட்டது. செடிகள் சில இடங்களில் உயரம் குறைவாக வளர்ந்திருந்தன.

அருகில் போனதும், அந்த இடத்தில் பல செடிகளின் இறந்த இலைகள் காய்ந்து கிடந்தன.

அது நூதனமாகப் பட்டது.

கீழே குனிந்தார். இலைகளை விலக்கினுர். அப்போது தரையில் சில பதிவுகள் தெரிய சட்டென்று இன்னும் குனிந்தார். இன்னும் பல உயிரற்ற இலைகளை விலக்கினுர்.

கண் பலமுறை கொட்டியது. கீழே அவர் பார்த்தது டயர்ப் பதிவுகள்தான்!

பல இடங்களில் தூர்ந்து போனாலும் சில இடங்களில் பளிச்சென்று இருந்தது.

அது ஒருவித சரளும் களி மண்ணும் கலந்த பூமி. அதில் பதிந்த உருவங்கள் அப்படியே அச்சுப் போலத் தெரிந்தன.

நெடுகப் பார்த்துக்கொண்டே போனார்.

அப்போதுதான் குற்றவாளி சொன்னது சரிதான் என்று பட்டது. நீண்ட தூரத்திற்கு இந்த கோட்டான் செடி அடியில் டயர்த் தடம் பதிவாகி இருக்கிறது. இடையிடையே தூர்ந்து இருக்கிறது. ஒரு நல்ல தூரத்திற்கு பரவியிருந்ததால் இதைக் குற்றவாளியால் அழிக்க முடியவில்லை.

அதற்கான பொறுமையும் நேரமும் அவனிடம் இல்லை.

அதனால்தான் நாயைப் போட்ட இடத்தைச் சொல்ல மறுத்திருக்கிறான்.

இன்னொரு விஷயம்.

ரோட்டை விட்டு விலகி அவன் தனது காரை இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறான். செடிகள் மீது காரை வேண்டுமென்றே செலுத்தியிருக்கிறான்.

சரி! இந்தப் பதிவுகளை உடனே காகிதத்தில் பதிவு செய்து ஆராய வேண்டியதுதான்! முடிந்தால் இவற்றை போட்டோ எடுக்க ஏற்பாடு பண்ணலாம்.

சிங் அந்தப் பையன் கையில் இரண்டு ரூபாய் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

மத்தியானம் மூன்று மணிக்கு போலீஸ் லாரி ஒன்று ஆட்களோடு அந்த இடத்திற்கு வந்து சேர, ஆட்கள் இறங்கி தடயப் பதிவுகளில் ஈடுபடலானார்கள்.

# 6

டயப் பதிவுகள் மூலம் நாலு டயர்களின் வரிகளைக் கண்டு பிடித்தார்கள்.

லிங் தலைமையில் அதே போல டயர்கள் உள்ள கார்களைத் தேடுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது.

அதே நேரம் மாலினி, ஊரில் உள்ள மனோ தத்துவ டாக்டர்களிடம் எல்லாம் போய், செக்ஸ் விஷயத்தில் யாராவது அவர்களை அணுகினார்களா என்று விசாரித்து வந்தாள்.

அப்படி வந்த நபர்களின் மன நோய் எப்படிப்பட்டது, அவர்கள் பெயர் விலாசம் என்ன என்பதையும் குறித்து வந்தாள்.

எல்லா ஜாபிதாக்களையும் சேர்ப்பது கடினமாக இருந்தது.

ஆள் பலம் நிறையத் தேவைப்பட்டது.

மாலினி கொண்டு வந்த லிஸ்ட்டை வைத்து, செக்ஸ் நோயாளிகள் யாரிடம் கார் இருந்தது என்று மற்றொரு லிஸ்ட் தயார் பண்ணப்பட்டது.

அது மொத்தம் ஐந்துபேர் பேரில் வந்து நின்றது.

உடனே அவர்கள் வீட்டுக் கார் டயர்கள் சோதிக்கப் பட்டன.

முதலில் தடயங்களும் அந்தக் காரின் டயர் வரிகளும் நன்றாக இல்லை.

அது ஏமாற்றமாக இருந்தது.

எனினும் அவர்களிடம் சிங் ஆரம்ப விசாரணைகளுக்கு ஏற்பாடு செய்தார்.

விசாரணையில் அவர்களுக்கும் அந்தக் கொலைகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிந்தது.

ஐந்து பேரில் மூன்று பேர் கொலையைப் பற்றிக் கேட்டதே இல்லை.

மற்ற இருவர் தங்கள் செக்ஸ் பிரச்னைகளுக்கு வேறு விதப் பரிகாரங்கள் வைத்திருந்தார்கள்.

விசாரணைகள் ஒரு திடீர் முடிவுக்கு வந்ததும் சிங் குழம்பினர்.

இவ்வளவு தூரம் நீந்தி வந்தும், ஒரு முடிவு கிடைக்கவில்லையே என்று எண்ணினர்.

ஒருவேளை.

எந்த டாக்டரிடமும் போகாத மனோதத்துவ நோயாளியாக இருப்பானோ?

அதனால் அவனுக்கு அவமானம் ஏற்படும் என்று நினைத்திருக்கலாம்!

—ஸார்! என்றாள் மாலினி.

—சொல்லு!

—எனக்கு ஒரு யோசனை தோணுது! முதல்லே இந்த ஸெக்ஸ் பற்றுக் குறையை ஒரு நபர் தனது மன நோயாக நினைக்காம இருக்கலாமில்லே!

சிங் யோசித்தார்.

—ஓ! தாராளமாக! அது இன்ன வகை என்று கண்டு பிடிக்க எல்லாராலும் முடியறதில்லே.

—அப்போ அவர் மனநோய் டாக்டர் யாரையும் பார்க்காமல் ஸெக்ஸ் கிளினிக் எதுக்காவது போயிருந்தால்...

சிங் அரை விநாடி யோசிக்க உடனே பளிச்சிட்டார்.
—நல்ல ஐடியா! அப்போ கிளினிக்குங்களை விசாரிக்கலாம். அதே நேரத்திலே இன்னொரு விஷயம் இருக்கு.

—என்ன ஸார்!

—பிரபல டாக்டர் விஜயம். பத்திரிகையிலே விளம்பரம் பண்ணி, ஆண்மை குறைவா, உடல் சோர்வான்னு உடம்பை விசாரிக்கிறாங்களே, அவங்களையும் ஒரு பார்வை பார்க்கணும். மொத்தம் எத்தனை கிளினிக் இருக்குன்னு கண்டு பிடிச்சு சொல்லு மாலினி.

—எஸ் ஸார்.

சீக்கிரம் விவரங்கள் வந்தன.

சிங் லிஸ்டை ஊடுருவிப் பார்த்தார். ராயப்பேட்டை ஹைரோட்டில் இருந்த மெடிகல் யோகா கிளினிக் சிங்கை கொஞ்சம் பிடித்து இழுத்தது!

கொஞ்சம் மேல் வர்க்கத்துக்கு என்று தோன்றியது.
**Problems of your life and married life**

என்று போட்டிருந்தது. நாசூக்காக ஸெக்ஸை அறிவித்திருந்தது.

ஸ்தலம் பொறுத்த வரையில் உயர் வர்க்கமாகத் தோன்றியதால் சிங் அதைத் தேர்ந்தெடுத்தார்.

# 7

மெடிகல் யோகா கிளினிக் என்று பார்த்தபோது சிங்குக்கு இரண்டு விதமாகத் தோன்றியது. அதில் நல்லதும் இருக்கலாம், கெட்டதும் இருக்கலாம்.

மாடியின் படியில் ஏறினார். இருபுறமும் லாரல், மஹோகனியா போன்ற குட்டை குரோட்டன்கள். உள்ளே நகைக் கொத்து போல் விளக்குக் கொத்து. வராந்தாவின் இருபுறமும் வாடிக்கையாளருக்காக பெஞ்சு.

சிங் ரிஸப்ஷனில் தாம் ஒரு விஞ்ஞானப் பத்திரிகையாளர் என்று கூறினார்.

உள்ளே மானேஜர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். உள்ளே ஜாக் லெமன் செல்லமாகப் பாடிக் கொண்டிருந்தார். மானேஜர் ஒரு நாற்பது வயது யுவதி.

சிங்கின் வருகைக்காக உள்ளே அவள் அவசரமாக வந்திருந்தாள். அதற்கு முன் மிஸஸ் மாயா என்ற அந்தப் பெண் மணி இப்போதுதான் உள்ளே வந்திருந்தாள். நேராக ஜிம்னாஸியத்திலிருந்து வருகிறாள். இறுக்கமாக அண்டர் பாண்ட், அதைவிட இறுக்கமாக பனியன் இரண்டையும் அவசரமாக ஒரு போர்வையால் மூடிக்கொண்டு வந்து உட்கார்ந்தாள்.

சிங் தம்மை அறிமுகப்படுத்தினார். பிறகு அங்கே ஸெக்ஸ் சம்பந்தமாக கடந்த ஒரு ஆண்டு சிகிச்சை பெற்றவர்களின் ஜாபிதாவைக் கேட்டார்.

—ஒரு வருஷமா என்றாள் மாயா.

—ஆமாம்! அவசியம் வேண்டும்! என்றார் சிங்.

—சாவித்ரி என்றுள் மாயா!

—மா என்று உள்ளேயிருந்து குரல். பிறகு இளம் பெண் ஒருத்தி உள்ளே வந்து மாயாவிடம் உத்தரவு வாங்கிப் போனுள்.

—லிஸ்ட் தயாராகட்டும்! உங்களுக்கு எதுக்கு வேணும்! என்றுள் மாயா!

—ஒரு கொலே பத்தி கண்டுபிடிக்க உதவியா இருக்கும்; என்றுர் சிங்.

—ஓ...

—இங்கே வந்தவங்களே நீங்க குணப்படுத்தி அனுப்பிடறீங் களா? என்றுர்.

—பல நோய்களுக்கு சிகிச்சை கொடுக்கிறேம். ஸெக்ஸ் ஒரு கிளே! அநேகமா ஒரு நல்ல அளவு தேர்ச்சி பெறும்படி பண் ணிடறேம்.

—பொதுவா என்ன சிகிச்சை கொடுப்பீங்க?

—எல்லோருக்கும் யோகா. உடற்பயிற்சி — கட்டாயம் கொடுத்துடுவோம். அப்புறம் ஸைகோ அனலிஸிஸ் பண்ணு வோம்.

—அப்புறம்?

—அநேகமா பயம்தான் ஸெக்ஸிலே அடிப்படை குறை யாகத் தெரியும். அல்லது வேறே காம்ப்ளக்ஸ்; அது அதுக்குத் தகுந்தபடி ட்ரீட்மெண்ட் கொடுப்போம்.

—பொதுவா என்ன ட்ரீட்மெண்ட்?

—நல்ல டானிக், லேகியம். ஹார்மோன் காப்ஸியூல் இது போல ஏதாவது கொடுப்போம். முதல்ல நோயாளியுடைய சிகிச்சையை அதிகப்படுத்திப்போம்!

—அப்புறம்!

அவள் சிரித்தாள்! சிரிப்புக்குள் புதை பொருள் இருந் தது!

—அப்புறம் அவங்களுக்கு நிறைய ஆட்டோ—ஸஜஷன் கொடுக்கறேம். மந்திரம் மாதிரி அதை உருப் போடுவாங்க!

—இதெல்லாம் போதுமா?

—போதும்.

—அந்த உணர்வு இருக்கு என்கிறதை உங்களாலே கண்டு பிடிக்க முடியாதா?

—தீர்மானமாச் சொல்ல முடியாது. பொதுவா இந்த மாதிரி ஆளுங்க உடலுறவு கொள்ளும்போது ரொம்ப அதீதமான கொடூரமான வலுக்கட்டாயங்களே உபயோகிப்பாங்க! அதாவது

பெண்ணைப் போட்டு ரொம்ப துன்புறுத்துவாங்க! அதுவும் உச்ச கட்ட வேளையில் இந்த ஆளுங்க வெறி பிடிச்ச மாதிரி ஆயிடுவாங்க. என்ன செய்யறோம்னு தெரியாது.

—ஓ! கொலை பண்ணுவாங்க என்கிறீங்களா?

—பண்ணலாம் என்கிறேன்! பண்ணுவாங்கன்னு சொல்லலே! இந்த கொலை ஸார், பின்னாடி அந்தப் பெண் அவனை அடையாளம் காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதற்கும் இருக்கலாமில்லே?

—இருக்கலாம்.

—அப்போ அது வெறும் போலீஸ் கேஸ்!

—இப்போ இந்த மூணு பேர் பேரைச் சொல்றீங்களா?

—சொல்றேன்.

அவள் லிஸ்டைப் படித்தாள்.

—ஸார்! தியாகராஜ் .. சுதாகர் .. ராஜேந்தர்.... மூணு பேரும் பெரிய புள்ளிங்க..

—எப்படிச் சொல்றீங்க?

—பிஸினஸ்லோ, தொழிலோ நடத்தறாங்க!

—அவங்க விலாசம் தர முடியுமா?

—கொடுக்கச் சொல்றேன். சாவித்ரி ..

சாவித்ரி விஷயத்தைக் கேட்டுக்கொண்டு உள்ளே போனாள்.

—ஆமாம்! இந்த மாதிரி கேஸ்களை எப்படி சிகிச்சை பண்றீங்க!

—இது கொஞ்சம் கஷ்டமான கேஸ்! பெர்வர்ஷன் கேஸ்கள்! பெர்வர்ஷன்லேதான் சுகம்.

—பெர்வர்ஷன் எப்படி வந்தது?

—சின்ன வயசிலர்ந்து ஏதோ தடை முதலிய காரணங்களாலே இது வளந்திருக்கும். உடலுறவை குற்ற உணர்வா நினைச்சிருக்கலாம். அதை திருட்டுத்தனமாக அறிவு முற்றாத சிறுமிகள் கிட்டேந்துதான் பெறலாம்னு நினைச்சிருப்பாங்க!

அல்லது சிலவங்க சின்ன வயசிலேருந்தே ஒரு பெண்ணிடம் ஏற்படும் மாற்றங்களைத் தெரிந்து கொள்ள வழியில்லாம் **Penetration** இல்லாத செக்ஸ்ஸையே மனசிலே நினைச்சிருப்பாங்க! இவங்களாலே பின்னாடி அதை மாற்ற வழியில்லாமல் போயிடும்.

ஸார், இந்த பெர்வர்ஷன்களுக்குக் காரணங்கள் மட்டும் சொல்லிக்கிட்டே போகலாம். முடிவு கிடையாது.

—அப்புறம் அவன் மாறிட்டான்னு எப்படிக் கண்டு பிடிக்கிறது?

—நீங்க போலீஸ்! இருந்தாலும் மனம் விட்டுச் சொல்றேன். மனிதனுக்கு செக்ஸ் விஷயத்திலே எத்தனையோ தடைகள்! இவை நன்மையா தீமையா எனக்குத் தெரியாது! ஆனா இதனாலே அவனது செக்ஸ் திறன் பாதிக்கப்பட்டு விடுகிறது. இந்தப் பாதிப்பை நீக்கறதுக்கு யோகம், மருந்து, பயிற்சி இது எல்லாவற்றையும் தவிர நல்லா உணர்ந்து ஒத்துழைக்கிற ஒரு பெண்ணும் வேணும்.

—மனைவி இருக்காங்களே!

—ரைட். இதிலே மனைவிங்கதான் ஒத்துழைக்கணும்— ஆனா ஆச்சரியமா அவங்க பாதிப்போர் இதைச் செய்யறதில்லை.

—ஓகோ!

—நம்ம நாட்டிலே செக்ஸ் அறிவு குறைவு! அதையும் விரும்பத் தகாததா நினைச்சு ஒதுக்கிடறாங்க! செக்ஸ் விஷயத்திலே பெண்களுக்கு ஒரு நிரந்தரமான பிகு வந்திடறது. பெண்கள் இதை மாத்திக்கவே மாட்டேங்கறாங்க! இதனாலே ஒரு குறையுள்ள கணவன் தன்னைச் சரியாக்கி...

—சரி வீட்டிலே ஒத்துழைப்பு கிடைக்காட்டி நீங்க என்ன பண்றீங்க?

—அதான் ஸார். நீங்க போலீஸ்! சட்டம்தான் உங்கள் குறி! இந்த மாதிரி கேஸ்களுக்கு சமூகச் சட்டங்களுக்கு அப்பாலே ஒரு பரிகாரத்தைத் தேடவேண்டியிருக்கு! அதாவது இந்த ஆண்களுக்கு ஒத்துழைக்கிற மாதிரி பெண்களைத் தேடிக் கொடுக்க வேண்டியிருக்கு!

—சிவப்பு விளக்குப் பெண்களா?

—சிவப்பு விளக்கோ கால் கேர்ளோ, இங்கே மொத்தத்திலே அனுசரணையாப் போகிற பெண் ஒருத்தி வேணும்.

—நீங்க அந்த மாதிரிப் பெண்ணுங்களைத் தயார் பண்ணி வச்சிருக்கிங்களா?

—எங்களாலே முடியாது. பக்கத்திலே நாலு வீடு தள்ளி ஒரு ரகசிய அமைப்பு இருக்கு! நாங்கள் வேறே வழியில்லேனு நினைக்கிறவங்களுக்கு அங்கே கைகாட்டி. இன்னின்ன வகையிலே பெண் வேணும்னு சொல்றோம். அங்கே ஸப்ளை பண்றாங்க!

—அந்தக் காரியமெல்லாம் இங்கே நடக்குமா அங்கேயா;

—அங்கேதான்! எங்க ஆட்கள் உதவிக்குப் போவார்கள்!

—இந்த - மாதிரி சிகிச்சை அளிச்சா குணமாயிடுங்களா;

—முக்கால்வாசி குணமாயிடுங்க! மனசிலே இருக்கிற தடை உணர்ச்சி அல்லது குற்ற உணர்ச்சி எல்லாம் தானாக மாறிடுது.

ஜாபிதா வந்தது.

சிங் அதைப் பார்த்ததும் சற்று அயர்ந்தார். எண்பத்திரண்டு பேர் இருந்தது! இவ்வளவு பேரையும் விசாரிக்கவோ? தலை சுற்றியது.

—போன ஆகஸ்ட்லே ஆரம்பிச்சு இன்னிக்கு வரை கொடுத்திட்டோம் என்றாள் சாவித்ரி.

சிங்கின் திகைப்பு சற்று நேரம் புகை போலச் சுற்றியது.

—மேடம்! என்றார் மாயாவை நோக்கி.

—எஸ் ஸார்.

—எனக்கு வேண்டிய கேஸ் சொல்றேன்! அது ஒரு வக்கிர விஷயம்! ஒரு ஆணுக்கு சின்னப் பெண்கள்லே அதுவும் பருவ வயசு விளிம்பில் இருக்கிற பெண்கள் கிட்டே ஆசை வருது. அந்த மாதிரிப் பெண்களைக் கடத்திட்டுப் போய் அனுபவிச்சுக் கொன்னு புடறான்.

—ஆ! என்று இடை மறித்தாள் மாயா! —எங்களுக்கு அது மாதிரி மூணு கேஸ் உண்டு. ஆனா கொல்லுகிற உணர்வு உண்டா இல்லையான்னு தெரியாது.

பொதுவா ஸெகஸ்க்கு எங்கெல்லாம் இந்தத் தடை விழுறதோ அங்கெல்லாம் இதுவும் இது போன்ற வேறே பிரச்னைகளும் உண்டாயிடும்.

—தடையில்லாட்டா உண்டாகாது என்கிறீங்க!

—பொதுவா இல்லே. சில பூர்வீகக் குடி மலைஜாதி மக்களிடையே ஸெக்ஸுக்கு வயசு முதலிய எல்லாத் தடையும் கிடையாது. இதனாலே இவங்ககிட்டே இந்தப் பிரச்னையே கிடையாது. மிருகங்கள் கூட இதே நிலைதான். ஆனால் நாகரிக மனிதன் சில கட்டுப்பாடுகள் நிமித்தம் தடை விதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி இருக்கான். இது நன்மையா தீமையான்னு எனக்குத் தெரியாது. ஆனா நிச்சயம் இது, இது போலப் பிரச்னைகளைக் கொடுத்துடறது.

—சரி! இந்த மூணு பேர் கேஸுக்கு வாங்க! இவங்க விஷயத்திலே நீங்க என்ன சிகிச்சை அளிச்சீங்க?

—எங்க வழக்கமான சிகிச்சைகள்தான்! மனசைக் கலைக்கப் பார்ப்போம்.

—இவங்களை சிவப்பு விளக்குக் காரிங்ககிட்டே அனுப்பிச்சிங்களா?

—அது பிரயோசனமில்லியே! சின்ன வயசுக்காரங்க கிட்டே அனுப்பி இவங்களுடைய பலாத்கார உணர்ச்சிகளை முறியடிக்கலாம்! ஆனா இதை சமூகம் ஒத்துக்காது. அதனாலே இதிலே நாங்க எதுவும் செய்யறதில்லே! ஆனா இவங்க அவஸ்தையை

நீங்க கேட்டாத்தான் தெரியும். சிவப்பு விளக்குக்காரிகிட்டே இவங்க போக மாட்டாங்க! அவங்க வயது இவங்களுக்கு அதிக மாத் தோணும். வயசில் சின்னவங்களே கிடைக்காது. அது ரொம்ப கொடூரமா வேறே கருதப்படும். இதனாலே இவங்க ஸெக்ஸுக்கு போக்கிடம் இல்லாம படுகிற அவஸ்தை.. போதும் ..........

மூன்று பேர் பெயர்களேயும், ஸெக்ஸ் பற்றி நீண்ட உரையையும் கேட்டுவிட்டு சிங் தமது அலுவலகம் திரும்பினார்.

லிங்க்கும் மாலினியும் வெவ்வேறு லிஸ்ட்களேயும் குறிப்புகளே யும் கொண்டு வந்திருந்தார்கள்.

எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்ததில் சிங்குக்கு தாம் செல்லும் அப்போதைய வழி சரியாகத் தோன்றியது.

மனசில் ஏனோ நெருடல் அந்த மூன்று பேர் பேரிலும் தான் விழுந்தது.

தியாகராஜ், சுதாகர், ராஜேந்தர்.

குறிப்புகளேப் பார்த்ததில் ஒரு தொழிற்பேட்டையில் சிறு தொழில் அதிபர் அவன் தியாகராஜ்!

இரண்டாவது நபர் ஒரு வர்த்தக நிறுவனத்தின் காரிய தரிசி! இது அடையாறில் இருந்தது. இவன் பெயர் சுதாகர்.

மூன்ருவது ராஜேந்தர். ரியல் எஸ்டேட் வியாபாரம் நடத் திக் கொண்டிருந்தான்.

தியாகராஜைக் காலேயில் திடீரென அவனது வீட்டில் சந் தித்த போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அசோக் நகரில் தங்கி இருந்தார்—

சிங் தம்மை போலீஸ் என்று அறிமுகப்படுத்தியதும் அவர் முகத்தில் ஒரு அரைக் கணம் வெளுப்பு ஏற்பட்டது.

—உட்காருங்க என்ருன்.

அவன் மற்ருெரு நாற்காலி எடுத்து வரும்போது அதிகம் யோசிப்பது தெரிந்தது.

—என்ன விசேஷம்! என்று கேட்டவாறு உட்கார்ந்தான்.

—துளசி உங்களுக்குத் தெரியுமில்லே? என்று சடக்கென்று கேட்டார் சிங்!

பெண்ணின் பெயரைச் சொன்னுல் அவன் முகம் எப் படி மாறுகிறது என்பதைக் கவனிக்க விரும்பினுர்.

—துளசியா! யார் அவள்! என்று சாதாரணமாகக் கேட் டான் அவன்.

—கஜபதி நகர் தெரியுமா?

—கஜபதி நகர்? கேள்விப்பட்டதில்லையே.

—பூனமல்லி தாண்டி 29 கிலோ மீட்டர்லே என்ன விசேஷம் தெரியுமா?

—தெரியாதே!

—அங்கே நீங்கள் போயிருக்கிறீர்களா?

—இல்லையே!

—சம்பகாவுடைய குட்டி நாய் தெரியுமில்லே?

—தெரியாதே! ஸார், நீங்க என்ன எதாவது விஷயத்திலே என்னை அமுக்கிவிடப் பார்க்கறீங்களா?

மற்ற இரண்டு பேரிடமும் இதே போலவே கேட்டார்.

எல்லோரிடத்திலும் இருந்தும் தயங்காமல் பதில்கள் வந்த பிறகு அவர் யோசித்தார்.

திரும்பவும் பழைய நிலைக்கே வந்தது போல தோன்றியது.

மூன்று பேருக்கும் கார் இருந்தது. லிங்க் மூன்று பேர் கார்களின் டயர்களைக் கவனித்தான்.

சிங் ஏற்கெனவே கொடுத்த டயர் வரை படம் இந்த டயர்களின் வரிகளோடு ஒத்துப் போகவில்லை.

ஆக மூன்று பேர்களும் குற்றவாளிகள் அல்ல என தீர்மானத்திற்கு வந்தார்கள்.

தவறான ஆட்களை சந்தேகப்பட்டோம் என்று நினைக்க சிங்குக்கு வருத்தமாக இருந்தது.

சிங்குக்கு தமது ஊகம் தப்பு என்று தோன்றியது. இருந்தாலும் மனதில் நெருடியதால் இந்த மூன்று பேர்களையும் தனியாக போலீஸாரைக் கொண்டு பிரத்யேகமாகக் கவனிக்க ஏற்பாடு செய்தார்.

இப்போது சிங் மற்ற கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றவர்களின் விவரங்களைக் கொண்டு வரச்சொன்னார்.

அதில் கண்ணோட்டமாக வரும்போது சிங் திடுக்கிட்டார்—லிங்க்! என்றார்.

—எஸ் ஸார்!

—இந்தப் பெயரை நீ கவனிக்கலையா என்றார்.

—இல்லையே ஸார்.

—குருநாத்னு போட்டிருக்கு.

—லிங் அருகில் வந்து பார்த்தான்.

—ஆமா ஸார்.

இந்த ஆசாமி தினமித்திரன் உதவி ஆசிரியராக இருப்பாஞ?

—31 தங்கப்பன் தெருன்னு போட்டிருக்கு.

—ஒரு காரியம் செய்! உடனே அதைச் செக் அப் பண்ணி வந்து சொல்லு! என்ன சந்தேகம் வந்தாலும் அதை விசாரிக்காம விடப்படாது.

லிங் பறந்தான்.

35 நிமிடத்தில் திரும்பிஞன். அந்த வீட்டில் இருப்பது தினமித்திரன் உதவி ஆசிரியர்தான்.

சிங் உடனே பறந்தார்.

அந்தக் காலையில் குரு புறப்பட்டுக் கொண்டிருந்த நேரம்.

சிங்கைப் பார்த்ததும் புருவம் தூக்கிக் கொள்ள அவரை உள்ளே அழைத்துப் போஞன். சோபாவில் உட்கார்ந்ததும்—ஏதாவது புதுத் தகவலா என்ருன்!

—உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா? என்ருர் சிங்.

—தெரியும் ஸார்! பிரைவேட் டாக்ஸி வச்சிருக்கேன்.

—டாக்டர் கைலாஷ் மெண்டல் ஹெல்த் கிளினிக் நடத்தருரே தெரியுமா?

அவன் வாய் சுருண்டது. கண்களை நிதானமாக்கி அவரை ஒரு விசாரிக்கும் பார்வை பார்த்தான்.

சிங்கும் விடவில்லை. அதே பார்வையைத் திருப்பி அதில் ஒரு அழுத்தத்தையும் காண்பித்தார்.

தன் குரலை மிகவும் தாழ்த்தி—ஏன் ஸார் உங்களுக்கு ஏதாவது தெரிஞ்சுதா என்ருன்.

—நீங்க வாக்குமூலம் கொடுக்க விரும்பறீங்களா? என்ருர் சிங் தணிந்த குரலில்.

ஒரு பயம் அவன் பார்வையில் புகுந்தது.

—ஸார், நீங்க என்ன சொல்றீங்க? என்ருன்.

—நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க? என்ருர் சிங்.

—உங்களுக்கு அந்த விஷயம் எப்படித் தெரிஞ்சுது?

—குரு அடிக்கடி உள்ளே பார்த்துத் திரும்பிஞன்.

நீங்க என்னைக் குறுக்கு விசாரணை விசாரிக்கப் பார்க்க

றீங்க! என்றார் சிங்.

—ஐயோ இல்லே ஸார்! தயவு செய்து வெளியே எங் கேயாவது பேசலாமா? தனியா! .. உங்க ஆபீஸ்லேயே...

—ஏன்!

—இல்லே இதுக்கு மேலே பேசினா என் குடும்ப அமைதி பாழாயிடும். தயவு செய்து .. ப்ளீஸ்..

சிங் ஒரு கணம் யோசித்தார்.

பிறகு —வாங்க என்று அவனை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

ஒரே வேகத்தில் ஜீப்பை விடச் சொல்லி பன்னிரண்டா வது நிமிடத்தில் ஆபீஸில் இருந்தார்.

தனி அறைக்கு அழைத்துச் சென்றதும் இருவரும் உட்கார —ஸார் என்று குரு அவரை அழைத்தான்.

அடுத்த கணம் சரசர என்று கண்ணீர் உருண்டது.

சிங் கண்ணில் ஒரு விநாடியில் இரக்கம் ஏறியது.

—சொல்லுங்க என்றார் சிங்.

குரு கண்ணைத் துடைத்து,

—எனக்குக் குறை உண்டு; நான் அந்த டாக்டர்கிட்டே போனது உண்மை! ஆனா....

—மனம் திறந்து எல்லாத்தையும் ஒத்துக்கிடுங்க! நான் உதவி செய்ய பார்க்கிறேன்!

- ஸார் என்று தடுமாறி அழைத்தான் குரு!

கண்கள் திகைப்பாகப் பார்க்க — ஸார் என்னை என்ன நினைக்கிறீங்க!

சிங் பதில் பேசவில்லே.

நான்தான் அந்தக் கொலேகள் செஞ்சேன்னு நினேக்கிறீங் களா?

—நீங்கதான் வாக்குமூலத்துக்கு அழைச்சிட்டு வந்தீங்க.

—சத்தியமாச் சொல்றேன்! எனக்கும் அந்தக் கொலேங் களுக்கும் சம்பந்தம் இல்லே. மனசிலே எந்தச் சந்தேகமும் படா தீங்க.

சிங் நிமிர்ந்து பார்த்தார்.

—ஆமா ஸார்! நான் உங்களே இங்கே அழைச்சிட்டு வந்ததற்கே காரணம் என் குறை என் மனேவிக்குத் தெரியக் கூடாது என்கிறதுக்குத்தான்.

கதை மாறுகிறதே என்று நினைத்தார் சிங்.

—சத்தியமா அதுக்குத்தான்! அவள் ஒரு வெகுளி! கிராமத்துப் பெண். படிப்பு · எட்டாவதோடு! பெரியவளானப்புறம் வெளியே போனதேயில்லே. ஸெக்ஸ் பற்றி எதுவும் தெரியாது. ஆச்சரியப்படுவீங்க! முதல் இரவுன்னுக்கூட ஏதோ ஒரு ரகசிய விஷயம்னு தெரியுமே தவிர பூராவுமா எதுவும் தெரியாது. அவ்வளவு அறியாதவள். முதல் இரவிலே அவளுக்கு எந்த அதிர்ச்சியும் இல்லே. எனக்குத்தான் அதிர்ச்சி!

வார்த்தைகள் மனத்தின் விசுவாச உண்மையுடன் வருவதாக சிங்குக்குத் தோன்றியது.

அதை நம்பலாமா?

—உங்களுக்கு என்ன அதிர்ச்சி என்றார்.

—என் குறை அப்போத்தான் எனக்குத் தெரிஞ்சுது! எனக்குப் பெரிய அதிர்ச்சி! மனம் நொந்து போயிட்டேன். தாம்பத்திய வாழ்க்கை வைத்த பிறகு எத்தனையோ முறை முயன்று பார்த்தேன். முடியலே. நான் ஏதோ மனநோய்க்கு ஆளாகி இருக்கேன்னு ரொம்ப நாளைக்கப்புறந்தான் தெரிஞ்சுது!

—உடலைப் பொறுத்தவரை நீங்கள் ஆல் ரைட்?

—ஆமா ஸார்! அது எனக்கு நன்றாகத் தெரிந்தது. ஆண்மை எனக்கு கிளர்ந்தது. ஆனால் வேண்டாத நேரத்தில் தான் கிளர்ந்தது. வேணும்கிற நேரத்தில் அது மூச்சுப் பேச்சுக் காட்டவில்லே. ஆங்கிலத்தில் அதற்கு விளக்கவுரை சொல்லும் போது, வேண்டும் போது ஏற்படும் ஆண்மைதான் ஆண்மை எனப்படும். இந்த தகுதியில்லாதது ஆண்மையில்லே' என்று சொல்லியிருக்கிறது. இதைப் பார்த்தால் நான் குறையுள்ளவன்தான் என்று தெரிந்தது.

—உங்க மனைவி அதைப் புரிஞ்சுக்கிடல்லே.

—சத்தியமாச் சொல்றேன். புரிஞ்சுக்கிடவே இல்லே. அந்தரங்கமா ஆடையில்லாமல் குலவறதை மாத்திரம் அவ ஸெக்ஸ்னு நினைச்சுக்கிட்டிருந்திருக்கா! ஆனா இப்பப்போ அவ மனசிலே சில சில சந்தேகங்கள் வர ஆரம்பிச்சிருக்கு. அது என் வாழ்க்கையைப் பாழாக்கிடுமோன்னு தோணுது! அதனாலேதான் அவள் காது கேட்க வேண்டாமின்னுதான் உங்களை இங்கே அழைச்சுட்டுப் போகச் சொன்னது.

—சரி மேலே என்ன ஆச்சு?

—நான் டாக்டர் கைலாஷ்கிட்டே போனேன். அவர் பல வாரம் சோதிச்சாரு ! ரொம்ப அதிசயமா ஒண்ணு கண்டு பிடிச்சாரு.

சிங் புருவத்தை உயர்த்தினார். — எனக்கு வயதில் குறைந்தவர்கள் மீதுதான் சபலம் இருக்குதுன்னு சொன்னார்.

—எப்படி கண்டு பிடிச்சாரு?

—அவர் ஒரு அனுபவம் மிகுந்த டாக்டர். நல்ல பீஸ் வாங்குவார். அதே நேரம் அவரே கடுமையாக உழைப்பாரு. என்னை பலமுறை விசாரிச்சாரு. என் செக்ஸ், நினைப்பு, ஆசை எல்லாவற்றையும் மனம் திறந்து கொட்டச் சொன்னாரு' என் மனசிலே நிறைய தடை உணர்வுகள் இருப்பதாகக் கண்டு பிடிச்சு அதை உடைச்சு எறிய ஸோடியம் ஆம்ஃபிடால் இஞ்செக்ஷன் கொடுத்து என் உண்மையை அப்பட்டமாக பேச வச்சாரு.

அது மட்டுமில்லே, என்னை அழைச்சிட்டு ஒரு மோசமான கிளப்புக்கு போனாரு. அங்கே என் மன நிலையைக் கண்டு பிடிச்சிட்டாரு.

அதாவது எனக்கு ஸெக்ஸ் வயது அதிகமானவங்கக்கிட்டே ஏற்படாதுன்னு. அதற்கு பரிகாரம் எல்லாம் சொல்லி கொடுத்தார்.

ஆனா இதிலே குறிப்பாக என் மனசு என்ன வேகத்திலே மாறுதோ அந்த வேகம்தான் முக்கியம்னு சொன்னாரு.

—இப்ப மாறுதல் ஏற்பட்டு வருதா?

—வருது! அதிசயமா மாறி வரேன். அந்த கிளப்புக்கு அடிக்கடி போறேன். அங்கு உங்களுக்கு எந்தத் தகுதியிலும் பெண் கிடைக்கும்—டாக்டர் சொன்னபடி நடந்துக்கிறதில்லே என் மனசிலே இருக்கிற தடை உணர்வெல்லாம் கரைஞ்சுகிட்டே வருது. இன்னும் ஆறு மாதம்தான். மற்றவர்களைப் போல சரியாயிடுவேன்

ஆனா .... ஸார்.

சிங் திரும்பினார்.

—இதிலே நான் செலவழிச்ச பணம் இருக்கே ஒரு மத்தியதர ஆசாமியாலே நிச்சயம் செலவழிக்க முடியாது. அது மட்டுமில்லே மனசிலே நிறைய பாவம் புண்ணியம்னு போட்டு, உருப்போட்டு வந்தவங்க, இந்த சிகிச்சை வழியை லேசிலே பின்பற்ற முடியாது. இங்கே எல்லாத்தையும் உடைச்சு எறியனும், துணியணும் துணிந்த பின்தான் சுகம்.

—ஓகோ.

—ஆமா ஸார் இது எத்தனை பேருக்குத் தெரியும்.

கிளப்புக்கு போக மாட்டாங்க. அங்கே வெளிப் பெண்களோடு உறவு வச்சிக்க மாட்டோம்பாங்க.

ரொம்ப பயப்படுவாங்க! பயம்தான் இதற்கு பெரிய விரோதி. அதைக் கொல்லறதுக்குதான் எல்லா சிகிச்சையும். துணிவு வேணும்.

துணிந்த பின்புதான் சுகம் கிடைக்கும்.

—உங்க மனைவி இதிலே என்ன நினைக்கிறா?

பணத்தை எல்லாம் நான் எங்கேயோ விரயம் பண்றேன்னு நினைக்கிறாங்க. அதுதான் இப்போ சந்தேகமாகி......

—அப்போ நீ இந்த கொலைகளை செய்யலே?

—சத்தியமா ஸார்! என் ட்ரீட்மெண்ட் வகையெல்லாம் அப்போடு நின்னுடுது. ஆனா இதே போல என் மனநோய்லே இருப்பவர்களை நினைச்சு நான் வருத்தப்படறேன். எல்லாரும் சரியான டாக்டர்கிட்டே போகிறதில்லை. ஒவ்வொரு டாக்டரும் என் டாக்டரைப் போல மனப்பூர்வமா உழைக்கிறதில்லை. படாடோபமா கிளினிக் வச்சு நிறைய பணம் வாங்கிட்டு, நோயாளியை இழுத்தடிச்சு . . . . அப்புறம் அவன் தலையிலேயே பொறுப்பை ஏத்தி அனுப்பிச்சுடறாங்க! அதனால்தான் எனக்கு இந்த கொலைகளை செஞ்ச மனநோய்க்காரன் மீது பரிதாபம் ஏற்பட்டது.

அவன் சரியான வழியைத் தேர்ந்தெடுக்கலே. அதை அவனுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவும் இல்லை. டாக்டர் கைலாஷ் மாதிரி எல்லாரும் வெளிப்படையா ஒரு சிகிச்சையை உடைச்சுச் சொல்லவும் மாட்டார்கள்.

இதனால் திண்டாடிப் போய் இந்தக் குற்றவாளி மாதிரி தப்பிதமான வழியிலே துணியறாங்க! எல்லாத்தையும் தப்பிதமா ஆக்கிடறாங்க.

—உங்களுக்குக் குற்றவாளி யாருன்னு தெரியுமா?

—நிச்சயமாத் தெரியாது ஸார்! ஆனா அவன் படற அவஸ்தை தெரிஞ்சு போச்சு! சுகத்துக்காக அவன் துணிஞ்சுட்டான்! ஆனா தப்பிதமான வழியில்! அவன் நோய் என்னைவிடக் கொடியதா இருக்கணும். ஏன்னா உச்ச கட்டத்திலே அவன் கொலை செய்யவே துணிஞ்சுட்டான்.

—சரி, மிஸ்டர் குரு, உங்களை நம்பறேன். நீங்க போகலாம். ஆனா இந்த கேஸ் தீருகிறவரை நீங்க கவனிக்கப்படுவீங்க.

—ஓகே ஸார்! நிச்சயம் கவனியுங்க! மடியில் இருந்தாத்தானே வழியில பயம்!

அவனை அனுப்பிய பிறகு சிங் மனத்தில் கதம்பமான நினைவுகள்.

மனிதப் படைப்புகளில் எழும் விசித்திரங்களை எண்ணினார். குரு மீது பச்சாதாபந்தான் எழுந்தது.

11.30க்கு மணி அடித்தது.

லாபரட்டரியிலிருந்து வெங்கட்ராம் பேசினார். சிங் கண்டெடுத்த நாய்ப் பட்டையில் கைரேகை ஒன்றை அவர் கண்டு பிடித்திருக்கிறார். கிரீஸ் கையினால் பட்டையைத் தொட்டிருந்ததால் அதில் அழுக்கோடு அந்த ரேகை தங்கி விட்டது. அமிலங்கள் விட்டு இப்போது தெளிவுபடுத்தியதால் கைரேகை சுத்தமாக வெளியே தெரிந்தது.

—போட்டோ எடுத்து மாலே மூணு மணிக்கு ஒரு ப்ரிண்ட் அனுப்பறேன்.

மாலே 3.15

ப்ரிண்ட்டைப் பெற்ற சிங் விரைவாக தியாகராஜின் சிறு தொழில் நிறுவனத்துக்கு கைரேகை நிபுணருடன் ஓடினர்.

உண்மையைத் துலக்குவதற்கு தம்மோடு ஒத்துழைக்கும்படி தியாகராஜுக்கு வேண்டுகோள் விடுத்துவிட்டு அவர் கை ரேகையைப் பதிவாக்கினர்.

திரும்பி வரும்போது ரேகை நிபுணர் ஜீப்பிலேயே அதைச் சோதிக்க ரேகைகள் ஒத்துப் போகவில்லே.

அடுத்து சுநாகரைத்தேடி அவனது நிறுவனத்துக்குச் சென்றர். அவனிடமும் கைரேகை எடுக்கப்பட்டது.

சோதித்ததில் அவர் கைரேகையும் ஒத்துப் போகவில்லே என்று தெரிந்தது.

இனி ராஜேந்தர் ஒன்று பாக்கி, ரியல் எஸ்டேட் சொந்தக்காரன்! ஆபிசில் பார்த்ததில் 'சைட்'டுக்குப் போயிருப்பதாகச் கூறினர்கள்.

சிங் யோசித்தார். ஒரு சந்தேகத்திற்காக ராஜேந்தர் வீட்டுக்கு ஜீப்பை ஓட்டச் சொன்னர். வீட்டில் ராஜேந்தர் இல்லே என்று தெரிந்தது. சிங்குக்கு ஏமாற்றமாக இருந்தது.

வீட்டில் ராஜேந்தர் மனேவி! போலீஸ் என்றதும் திகைப் போடு அவர்களேப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

—வீட்டில யாரெல்லாம் இருக்கிங்க அம்மா என்ருர் அவர்.

—நாங்க ரெண்டு பேர்தான்.

ஒரு அவசர விஷயமா வந்திருக்கிறேன். உங்க வீட்டிலே எதாவது கைரேகை கிடைக்கிறதான்னு பார்க்கிறேன் ஒரு கேஸ் விஷயமா! . .

கைரேகைக்காரருக்குக் கண் காட்டிஞர் அவன் அருகில் வந்ததும் மிஸ்டர் மணி! எனக்கு சந்தேகம்! நேரம் வேறே இல்லே—ஆள் அகப்படலே! போன இடமும் தெரியலே. இங்கே எதிலேயாவது ஆசாமி கைரேகை இருக்கா பாருங்க, அவசரம்! என்ருர்.

மணி வேலேயில் இறங்கினர். டெலிபோன், மேஜை, கதவு என்று பல குறிப்பிட்ட இடங்களில் பொடி தூவிப் பார்த்தார்.

கடைசியில் ராஜேந்தர் மேஜை மீதுள்ள கண்ணுடியிலிருந்து விரல் ரேகைகள் அத்தனேயும் கிடைத்தன.

இருவரும் விடை பெற்றுப் போக, ஜீப்பில் மணி அதிர்ச்சியோடு அந்த உண்மையைக் கண்டு பிடித்தான்.

நாய்ப்பட்டை ரேகையும், ராஜேந்தர் ரேகையும் ஒத்துப் போயின.

சிங் உடனே வொயர்லெஸ்ஸை இயக்கினார். தெற்கே தாம்பரம் தாண்டி கஜபதி நகருக்கு அடையாளம் காட்டி ஒரு லாரியைப் போகச் செய்தார்.

மற்றொன்றை பூனமல்லி பிராந்தியத்திற்கு வரச் சொன்னார்.

இருட்டியது.

சிங்குக்கு ஏன் அந்த பரபரப்பு!

இந்த நேரத்தில் ராஜேந்தர் 'சைட்'டுக்குப் போயிருக்கிறான் என்று சொன்னால் அது பொய்!

காரணம் வேறாக இருக்கும்.

மற்றொரு பெண் கடத்தப்பட்டு விட்டாளா?

பூனமல்லியை அடைய ஏழு மணி. அதைத் தாண்டி வழக்கமான இடத்தில் ஜீப்பை நிறுத்திவிட்டு சிங் கீழே குதித்தார்.

இருட்டைப் பொருட்படுத்தாமல், செடி கொடிகளைக் கிழித்துக் கொண்டு அந்த மேட்டிற்கு விரைந்தார்.

ஓட்டமும் நடையுந்தான்.

ஏறி, சுற்றிவரப் பார்க்க எதுவும் தெரியவில்லை.

மனம் தவிக்க இங்கே அவசியம் எங்கேயாவது இருப்பான் என்று மேட்டைச் சுற்றி சுற்றி வந்து நாலா புறமும் பார்க்க,

ஒரு குறிப்பிட்ட கோணத்தில் வந்த போது தூரத்தில் அந்த மினுக்கு தெரிந்தது.

ஒரு இருட்டில் மங்கித் தெரியும் உலோக மினுக்கு.

கோட்டாஞ் செடியின் நடுவில் அது தெரிய,

சிங் வீறிட்டுக் கொண்டு பறந்தார்.

மூச்சும் இரைப்பும்.

சட்டையும் பாண்டும் முள் மயங்கள். புஜங்களிலும், பாதங்களிலும் நிறையக் கீறல்கள்.

நெருங்கினார்.

ஒரு சின்ன மேடு ஏறியதும் இடைவெளி. ஓடினார்.

கால் அங்கே நின்றது.

நெருங்க, காலில் ஏதோ அசைவு! பிறகு தீனமான முணகல்! கார் பின்புறம் வந்து விட்டார்.

சிங் எச்சரிக்க வாயைத் திறப்பதற்குள் கதவு திறந்தது.

நிச்சயம் அது ராஜேந்தர்தான்.

தோளில் முணகியவாறு தொங்குவது என்ன?

சிறுமியின் உடல்!
துளசியாக இருக்கும்.
—நில்லு!
சிங்கின் கூப்பாடு அந்தப் பிராந்தியத்தைக் கூராகக் கிழித்தது.
கால்களைத் தடுமாற வைத்துத் திரும்பினான்.
—கீழே வை! அவளை!
சிங் ஆஜானுபாகுவாக வீரத் தோற்றமோடு தம்மை நிமிர்த்திக் காட்டினார்.
ராஜேந்தர் தயங்கினான். அவன் உடல் உதறுவது தெரிந்தது.
மெள்ள அந்தப் பெண்ணை நழுவ விட்டான்.
சிங் ஒரு பாய் பாய்ந்தார். அவனைக் கீழே வீழ்த்தி சில வலுவான முஷ்டிப் பிரயோகங்களால் அவனைச் செயலிழக்க வைத்தார்.
பெண்ணை அவசரமாகப் பார்க்க, அவள் அலங்கோலமும் குற்றுயிராகவுமாக இருந்தாள்.
மூச்சு இன்னும் இரைத்தது.
இதற்குள் போலீஸ் லாரி தூரத்தில் அது வந்து நின்றுவிட்ட சைகையை ஹார்ன் அடித்துக் காட்ட சிங், தம் பென்ஸில் டார்ச்சை வெளியில் எடுத்து அதற்கு பதில் சைகை காட்டி அங்கே வரச் சொன்னார்.
வான் தகிடுதத்தமோடு மெதுவாக இயங்கி அங்கே வந்தது.
துளசியை ஆஸ்பத்திரிக்கு உடனே அனுப்பினார்கள்.
அந்த ரியல் எஸ்டேட் ராஜேந்தரது நாட்டுப்புற எஸ்டேட்டில் இருந்த கச்சாக் கட்டிடம் என்றும் அதன் ரகசிய அறையும் கண்டு பிடிக்கப்பட்டது.
ராஜேந்தர் தனது பூரண அறிவுடன்அதையெல்லாம் காட்டிக் கொடுத்தான்.
பிறகு — ரொம்ப நன்றி சிங்.
என்னைப் பிடித்ததற்கு நன்றி! உங்களுக்கும் அது நிம்மதி. எனக்கும் நிம்மதி. எனக்குத்தான் பூரண நிம்மதி என்றான்!

முற்றும்.


ஃளிர்ட் பாண்டியன் டைம்!
கதை: விகடகவி
சித்திரம்: செல்லம்
ஒரு ரெஸ்ட்டாரெண்டில் மசாலா தோசைக்கு ஆர்டர் கொடுத்து விட்டு பாண்டியன் காத்துக் கொண்டிருந்தான்.
இந்த ஸ்பெஷல் மசாலா எப்ப வருமோ தெரியலியே... அதோ செம்தியா ரெண்டு சிட்டுங்க வருதுங்க. இங்க வந்து உட்கார்ந்தாலாவது கண்ணுக்குக் குளுமையா பாத்துகிட்டு இருக்கலாம்!
அந்தப் பெண்கள் பாண்டியன் டேபிளிடம் வருகிறார்கள்.
நீங்க வேணும்னு ரெண்டு பேரும் சேர்ந்து இப்படி உட்கார்ந்துக்குங்க. நான் அந்த ஓரத்தை சீட்ல உட்கார்ந்துக்கிறேன். எனக்கு ஸ்பெஷல் மசாலா எந்த ஜென்மத்துல வருமோ தெரியலே.
ரொம்ப தேங்ஸ் சார்... அதான் புஸ்தகம் புடிச்சிகிட்டு இருக்கீங்க போல இருக்கு.
எங்களுக்கு ரெண்டிரண்டு பளேட் பாசுந்தி, புலவு குருமா, பீச் மெல்பா...
உங்களுக்கு மசால் தோசை என் உனக்கு வருதோ?
சாரி சார்... முதல்ல உங்க மசாலா தோசை தீஞ்சு போயி டிச்ச. இப்ப ஸ்பெஷலா ரெடியாயிகிட்டு இருக்குது.
சார் உங்க ஸ்பெஷல் மசாலா...



அப்பாடா. இப்பவாவது கொண்டு வந்தியே. இப்ப தான் இந்த மசாலா வர்ரதுக் குள்ளே பஞ்சாயத்து எலக்ஷனே வந்துடுமுன்னு இவுங்ககிட்ட ஜோக் அடிச்சுகிட்டு இருந்தேன்.
வாடி டாய்லெட் போயிட்டு வந்துடலாம்.
நம்பளைக் காட்டி ஏதோ சொல்றுளே அந்தப் பொண்ணு. என்ன சொல்லி யிருப்பா?
சர்வர் காப்பியுடன் பில்லையும் கொண்டு வந்து வைத்தான்.
என்னப்பா சர்வர் இது? ஒரு மசாலா தோசையும் காப்பி யும் 22½ ருபாயா? யார் பில்லையோ என் கிட்ட கொண்டு வந்துட்டியா?
இல்லை சார். இங்க சாப்பிட்டுதுங்களே ... அந்தப் பொண்ணுங் களுக்கு நீங்க அத்தானுமே... பேசிச் சிரிச்சிகிட்டு இருந்தீங்களே... எங்க பில்லையும் அத்தான் பில்லோடு சேர்த்துப் போட் டுடுங்கன்னு சொல்லிட்டுப் போச்சுங்களே ....
பாண்டியன் விழி பிதுங்கி விழிக்கிறான். அவன் பையில் இருப்பது ரெண்டே ருபாய். தான்...
அடி பாவிகளா.... மொளகா அரைக்க என் தலைதானா கிடைச்சுது உங்களுக்கு?

COMICS OF TIMES

NOT FOR SALE
FAN MADE ONLY

ாடு
ங்கு
ணி
பளி
நிரு

- சிதம்பரம்- 1, க. ரலியா பேகம்

சம்யுக்தாவை 'கைமாறிய கனி' என அறிந்து புறக்கணித்த ரங்கராஜனுக்கு மனைவியான வனிதா 'அத்திக்கனி' என அவன் அறியாதது நல்ல தண்டனையே! மனிதர்களின் நிறங்களை 'குங்குமச் சிமிழ்' வழியே அள்ளித் தெளித்து வெளிக்காட்டிவிட்டார் லக்ஷ்மி!

- பூவிருந்தவல்லி, கு. ப. இரகுநாதன்

மற்றவர்களின் நிழலில் அண்டி வாழும் சராசரிப் பெண்களிலிருந்து, முற்றிலும் மாறுபட்டு, தன் வாழ்வை நிர்ணயித்துக்கொள்ளும் துணிவும், திறனும் கொண்ட சம்யுக்தாவை, பாரதி கண்ட புதுமைப் பெண்ணைப் படைத்திருப்பது பாராட்டுக்குரியது!

- வேலாயுதம்பாளையம், எம். சம்பத்

படக்கதை 'பாண்டியன் காதலி' படு தமாஷ்.

- கேகேநகர், எம்.பி. பாலசுப்பிரமணியன்



## 'கிசுகிசு' செய்திகளால் நான் பாதிக்கப்படவில்லை!

– ராதா

பேட்டி எடுக்கப்பட்ட தேதி: செப்.6
இடம்: விஜயா கார்டன்
நேரம்: காலை சுமார் 10 - 12 மணி

**ரா**தா நடித்து முதன் முதலாக சென்னையில் வெளியாகியிருக்கும் அவருடைய தெலுங்குப் படம் 'பிரேம மூர்த்தலு'. ''படத்தின் ரிசல்ட் எப்படி?''

''சென்னையில் ரிசல்ட் பற்றி சொல்ல முடியாது; ஆந்திராவில் அந்தப்படம் நன்றாக ஓடுகிறதாம்.

என். டி. ராமாராவுடன் சேர்ந்து நடித்த 'சண்ட சாசனரு' நூறு நாட்களைக் கடந்து ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்காக எனக்கு 'ஷீல்டு' அனுப்பி வைப்பார்கள் என்று நம்புகிறேன்.''

''பாலு மகேந்திரா டைரக்ஷனில் நடிப்பது பற்றி...''

''அந்தப் படத்திற்காக இன்னும் கால்ஷீட் தேதி கொடுக்கவில்லை.'' (இதில் ஹீரோவாக நடிக்க இருந்த நடிகர் பிரபு கால்ஷீட் பிரச்சினை காரணமாக விலகி விட்டார் என்பது புதிய செய்தி.)

''கிசுகிசு' மற்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகள் வரும் போது?...''

''மறுப்பதோடு சரி. அதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. நான் நடிகையாக இருப்பதால் என் சுதந்திரம் பாதிக்கவில்லை. சமீபத்தில் சபையர் தியேட்டருக்கு என் அம்மாவுடன் சினிமா பார்க்கச் சென்றேன்.''

– அக்னிகுஞ்சு

# குங்குமம்

இந்துமதி +
புஷ்பா தங்கதுரை
இணைந்து எழுதும்

## நான் + நீ




— இளமைத் தொடர்கதை


COMICS PDF TIMES